# மாற்று குடும்ப முறை

## (FOSTER CARE)

தலைப்பு : மாற்று குடும்ப முறை

முதல் பதிப்பு : 2018

உருவாக்கம் : இந்திய குழந்தைகள் நலச் சங்கம், தமிழ் நாடு
எண். 5, 3வது பிரதான சாலை மேற்கு, ஷெனாய் நகர், சென்னை 30
Ph : +91-44-26282833 / 26212550 மின்னஞ்சல்: iccwtn@gmail.com

திருமதி. கிரிஜா குமார்பாபு,
கௌரவ பொது செயலாளர்,
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

திருமதி. அ. சரஸ்வதி,
முதல்வர் - பயிற்சி மையம்,
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

செல்வி. பு. மேனகா,
கணினியாளர்,
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

வடிவமைப்பு : பி.எஸ்.எஸ். ராவ்

அச்சகம் : சாய் பிரின்ட் ஹவுஸ்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் - 1 : | ஒரு அறிமுகம் | 11 |
| அத்தியாயம் - 2 : | மாற்று பராமரிப்பு முறையின் முக்கியத்துவம் | 17 |
| அத்தியாயம் - 3 : | குழந்தைகளின் மாற்று பராமரிப்பு முறை குறித்த சர்வதேச நெறிமுறைகள் | 23 |
| அத்தியாயம் - 4 : | மாற்று குடும்ப முறை | 29 |
| அத்தியாயம் - 5 : | இந்தியாவில் மாற்று குடும்ப முறை | 35 |
| அத்தியாயம் - 6 : | மாற்று குடும்ப முறையின் அடிப்படை கொள்கைகள் | 41 |
| அத்தியாயம் - 7 : | மாற்று குடும்ப முறையின் வழிமுறைகள் | 45 |
| அத்தியாயம் - 8 : | மாற்று குடும்ப முறையில் பங்கேற்கும் அலுவலர்களும் அவர்களுடைய பொறுப்புகளும் | 61 |
| அத்தியாயம் - 9 : | எதிர்நோக்கும் சவால்கள் | 69 |
| | பிறசேர்க்கை | 76 |

திரு.ஆர்.லால்வேனா, இ.ஆ.ப.,
ஆணையர்,
சமூகப் பாதுகாப்புத் துறை,

எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லீஸ்,
சென்னை – 600 010.
தொலைபேசி:044–26425082/26426421
நிகரி: 044–26612989
மின்னஞ்சல்: dsd.tn@nic.in



# முன்னுரை

ஒவ்வொரு குழந்தையும் தன் பெற்றோர்களின் பராமரிப்பில் அன்பான உறவுகளின் அரவணைப்பில் வளர்வதே அவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்க இயலாது. பொதுவாக குழந்தைகள் சமூகத்தில் ஓர் அங்கமாக வளர்வதை நாம் உறுதி செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு சமூக அமைப்பில் குழந்தைகள் வளர்வதற்கு வாய்ப்புகள் இல்லாதநிலையில் மட்டுமே இறுதியாக அவர்களை குழந்தைகள் இல்லங்களில் தங்க வைத்து பராமரிக்கலாம் என 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. நிறுவனம் சாராது குடும்ப அமைப்பு முறைகளான தத்து வழங்குதல், மாற்று பராமரிப்பு, குழுவாக மாற்று முறையில் பராமரித்தல், நிதி ஆதரவுடன் பெற்றோருடன் இருத்திவைத்தல் ஆகிய செயல்திட்டங்களும் முக்கியமானது. மாற்று பராமரிப்பு முறையில் குழந்தைகள் அன்பையும், ஆதரவையும் பெற்று வலிமையான சமூக பின்னணியில் வளர இயலும். இருப்பினும் தமிழகத்தில் மாற்று பராமரிப்பு முறை போதிய அளவில் வரவேற்பினை பெற்றிருக்கவில்லை. எனவே மாற்று பராமரிப்பு முறையினை ஊக்குவிப்பது தற்போது அவசியமாகிறது. இக்கருத்தினை வலியுறுத்துவிதமாக தமிழ்நாடு, இந்திய குழந்தைகள் நல சங்கம் மாற்று குடும்ப முறை என்ற வழிகாட்டு கையேட்டினை யுனிசெப் நிதி உதவியுடன் வெளியிட்டுள்ளது பாராட்டத்தக்கது. இக்கையேட்டில் மாற்று பராமரிப்பு முறையின் முக்கியத்துவம் மற்றும் அடிப்படை கொள்கைகள் இதனை செயல்படுத்தும் பல்வேறு படி நிலையில் உள்ள அமைப்புகள் மற்றும் அலுவலர்கள் அறிந்து கொள்ளவேண்டிய கருத்துக்கள் மற்றும் சவால்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

இளைஞர் நீதிச் சட்டத்தின் செயலாக்கத்திற்கு பொறுப்பாய் உள்ள பல்வேறு அமைப்புகளுக்கும், பணியாளர்களுக்கும் இக்கையேடு பெரிதும் உதவியாக இருக்கும். இக்கையேட்டில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கவனமுடன் கடைப்பிடித்தால் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் மாற்று பராமரிப்பு முறையில் குடும்ப அரவணைப்பில் வளர வழிவகை செய்யலாம் என நம்புகிறேன்.

சமூக பாதுகாப்பு ஆணையர்

# அணிந்துரை



மாற்று குடும்ப முறை என்பது இந்தியாவிற்கு புதிதல்ல தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு முறையாகும். கோகுலத்தில், யசோதா மற்றும் நந்தகோபாலிடம் கிருஷ்ணன் வளர்ந்ததே இதற்கு சான்றாகும்.

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு கொடுக்க இயலாத குடும்பங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு கூடுமானவரையில் குடும்ப சூழலில் வளர்க்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். பெற்றோர்களற்ற குழந்தைகளை தத்து கொடுப்பதன் மூலம் ஒரு குடும்பத்துடன் இணைக்க முடிகிறது. தாய், தந்தை இருவரில் ஒருவர் இருந்தாலோ அல்லது இருவருமே இல்லாமல் இருந்தாலோ, அக்குழந்தையை மாற்று குடும்ப முறையில் இணைக்கலாம்.

மாற்று குடும்ப முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களை சார்ந்த பெற்றோர்கள், குழந்தைகளுக்கு அடிப்படை தேவையான உணவு, உடை, இருப்பிடம் இவைமட்டுமின்றி அன்பையும், பராமரிப்பையும் சேர்த்து கொடுக்கின்றனர். குடும்ப சூழலில் வாழ இயலாத குடும்பங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் குழந்தை இல்லங்களில் வாழ்ந்து வரும் குழந்தைகளை குடும்ப உறவோடு இணைக்கப்படுவதே மாற்று குடும்ப முறையாகும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்கள் அவர்களது சொந்த குழந்தைகைளைப் போலவே இந்த குழந்தைக்கும் தேவையானவற்றை செய்ய வேண்டும்.

மாற்று குடும்ப முறையில் சேர்க்கப்படும் குழந்தைகள் அவர்களுடைய தனிப்பட்ட அடையாளத்தை தொடர்ந்து வைத்துக் கொள்ள இயலும். இதனால் அவர்களை ஈன்றெடுத்த பெற்றோர்களின் தொடர்புகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

2015-ல் அமுலுக்கு வந்த இளைஞர் நீதிச்சட்டத்தில் மாற்று குடும்ப முறைப்பற்றி குறிப்பிட்டிருப்பது சிறப்பானதாகும். இருப்பினும் குழந்தையின் சொந்த உறவினர்களை மாற்று பெற்றோராக கருத இயலாது என்று கூறியிருப்பது கவனத்திற்குரியது. மேலை நாடுகளில் அதிக அளவில் மாற்று குடும்ப முறையில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் பலவிதமான (உடல்ரீதியாக, மனரீதியாக, பாலியல்ரீதியாக) பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டுள்னர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு குறிப்பாக இந்த அலகில் பணிபுரியும் குழந்தைகள் இல்லங்கள் அல்லாத பிற முறைகளை கவனிக்கும் சமூக சேவகர் அல்லது பாதுகாப்பு அலுவலர் இவ்வாறு மாற்று குடும்ப முறையின் மூலமாக இணைக்கப்பட்ட குழந்தையையும், குடும்பத்தினரையும் தொடர்ந்து கண்காணித்தல் என்பது மிக மிக அவசியம்.

இக்கையேடு குழந்தைகளை சிறந்த முறையில் மாற்று குடும்பங்களில் இணைப்பதற்கும், அவர்களின் முறையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும், குடும்பங்களை கண்காணிப்பதற்கும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்கனவே வெளியிட்டுள்ள மாற்று குடும்ப முறை கையேட்டினை தழுவியே இக்கையேடு எழுதப்பட்டுள்ளது.

இந்த கையேட்டினை சீரிய முறையில் தொகுத்தளித்த திருமதி. கிரிஜா குமார்பாபு, கௌரவ பொதுச் செயலாளர், இ.கு.ந.ச - தமிழ்நாடு அவர்களுக்கும், இந்த முயற்சிக்கு நிதி ஆதாரம் அளித்த யூனிசெப் நிறுவனத்திற்கும் எங்களது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தைகளின் பணியில்

திருமதி. ஆண்டாள் தாமோதரன்
தலைவர்,
இந்திய குழந்தைகள் நலச்சங்கம் - தமிழ்நாடு



# ஒரு அறிமுகம்

அத்தியாயம் - 1

# ஒரு அறிமுகம்

## 1. முன்னுரை:-

குழந்தைகள் ஒரு சமுதாயத்தின் அடித்தளம், அந்த சமுதாயத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய மனித ஆற்றல் குழந்தைகளை மையப்படுத்திய வளர்ச்சியே ஆகும். நாட்டின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்க வல்லது பாதுகாப்பும், தக்க பராமரிப்புடனும் வளரும் குழந்தைகளே ஆவார். உலகத்திலேயே குழந்தைகளின் நம்பிக்கையைப் பெறுவதை விட புனிதமான நம்பிக்கை வேறு எதுவும் கிடையாது. அவர்களுடைய உரிமைகளை மதித்து நடத்தலும், வளர்ச்சியை பாதுகாத்தலும், எந்தவித பயமுமின்றி அமைதியான சூழ்நிலையில் வளர்வதற்கான உத்தரவாதத்தை அளித்தலுமே மனித சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

தமிழ் இலக்கியங்களில் குழந்தைகளை வெகுவாகப் போற்றி மிகச்சிறந்த இடத்தை அளித்துள்ளது. கடவுளுக்கு இணையானவர்கள் குழந்தைகள் என்றும், குழந்தைகளின் மழலைச் சொல்லை கேட்காதவர்கள் வாழ்வின் இனிய சங்கீதத்தை உணராதவர்கள் என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. இருப்பினும் நடைமுறையில் குழந்தைகள் உண்மையாகவே அனைத்து உரிமைகளும் அளிக்கப்பட்டு, பாதுகாப்பான சூழ்நிலையில் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு, முழு வளர்ச்சியை நோக்கி பயணிக்கின்றார்களா என்ற கேள்வி எழும்பொழுது, முழுவதுமாக இல்லை என்ற பதிலே நம்மை எதிர் கொள்கிறது.

நமது நாட்டில் குழந்தைகளின் நிலைமையைக் குறித்த அளவீடுகள் சில கணக்கெடுப்பின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

1. சிசு மரண விகிதம் (IMR - Infant Mortality Rate)

   குழந்தைகள் பிறந்து ஒரு வருடத்திற்குள் அதாவது குழந்தையின் முதல் பிறந்த நாள் கொண்டாடுவதற்கு முன்பாகவே இறக்கும் நிலையைத்தான் சிசு மரண விகிதம் என்று குறிப்பிடுகிறார்கள். இதன் விகிதம் என்பது 1000 உயிருடன் பிறக்கும் குழந்தைகளில், ஒரு வருடத்திற்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும்.

   5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பதை குழந்தைகள் மரண விகிதம் என்று குறிப்பிடுகின்றார்கள்.

| விவரம் | இந்தியா | தமிழ் நாடு |
|---|---|---|
| சிசு மரண விகிதம் (IMR) | 41 | 20 |
| 5 வயதிற்கு கீழ் குழந்தைகளின் மரண விகிதம் (U5MR) | 50 | 27 |

*ஆதாரம்: தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (NFHS IV -2015-2016)*

2. ஊட்டச் சத்து குறைபாடு (Malnourishment)

குழந்தைக்கு ஒரு நாளைக்குத் தேவையான உணவு கிடைக்காமல் இருப்பது அல்லது சரிவிகித உணவை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து குழந்தைகள் நோய்வாய்ப்படுகின்றனர். இதனால் அவர்களின் வயதிற்கேற்ற வளர்ச்சி, எடை மற்றும் உயரம் குறைந்து காணப்படுகின்றனர்.

| விவரம் | இந்தியா | தமிழ் நாடு |
|---|---|---|
| 5 வயதிற்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் (%) | 35.8 | 23.8 |

*ஆதாரம்: தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (NFHS IV -2015-2016)*

3. இரத்த சோகை (Anemia)

குழந்தையின் இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில் உள்ள சிவப்பு நிறமியின் (Haemoglobin) அளவு குறைந்து காணப்படுதல் ஆகும். சிவப்பு நிறமியின் அளவானது 11 கிராமிற்கு கீழ் இருந்தால் இரத்த சோகை எனப்படும்

| விவரம் | இந்தியா | தமிழ் நாடு |
|---|---|---|
| 6 - 59 மாதங்களுக்குட்பட்ட இரத்த சோகை உள்ள குழந்தைகள் (<11.0 g/dl) (%) | 58.6 | 50.7 |

*ஆதாரம்: தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (NFHS IV -2015-2016)*

4. கடத்தலுக்கு உள்ளாக்கப்படும் குழந்தைகள் (Child Trafficking)

குழந்தைகளை சமூகம் அல்லது சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுத்துவதற்காக ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குழந்தை மற்றும் பெற்றோரின் விருப்பத்துடன் அல்லது விருப்பத்திற்கு மாறாக அழைத்து செல்வதைத்தான் குழந்தை கடத்தல் என குறிப்பிடுகின்றனர்.

| விவரம் | இந்தியா | தமிழ் நாடு |
|---|---|---|
| 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளை கடத்திய விவரம் | 54328 (60.4%) | 374 |

*ஆதாரம்: National Crime Records Bureau, Ministry of Home Affairs 2016*

5. பள்ளி இடைவிலகிய குழந்தைகள் (School Dropouts)

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு அடிப்படையாக திகழ்வது கல்வி ஆகும். ஒரு நாட்டின் முன்னேற்றமானது தனி மனிதனுடைய கல்வியைச் சார்ந்ததாகும். இத்தகைய கல்வி கிடைக்கக்கூடிய இடமான பள்ளிக்கு செல்லாமல் பல காரணங்களால் குழந்தைகள் பள்ளியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு உள்ள குழந்தைகளை பள்ளி இடைவிலகிய குழந்தைகள் என குறிப்பிடுகின்றனர்.

| விவரம் | இந்தியா | தமிழ் நாடு |
|---|---|---|
| 10ம் வகுப்பில் பள்ளி படிப்பை இடை நிறுத்திய குழந்தைகள் (விகிதத்தில்) | 17.06 | 8.10 |

*ஆதாரம்: School Education In India, U-DISE 2015-2016*

6. தொட்டில் குழந்தை திட்டம் (Cradle Baby Scheme)

தொட்டில் குழந்தை திட்டம் 1992ம் வருடம் தொடங்கப்பட்டது. பெண் சிசுக்கொலையை தடுப்பதற்கான முதல் திட்டமாகும். குழந்தையின் பராமரிப்பிற்கு தேவையான அனைத்து வசதிகளை கொண்ட “தொட்டில் குழந்தை வரவேற்பு மையம்” முதன் முதலில் சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, இன்று பல மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. தேவையில்லை அல்லது கைவிடப்பட்ட அல்லது மாற்று திறனாளி போன்ற குழந்தைகளைப் பெறும் வகையில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம் / துணை சுகாதார மையம் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக பெறப்படும் குழந்தைகளை முறையாக பராமரித்து அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வை அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய பணி ஆகும். இத்திட்டத்தின் மூலம் வந்த குழந்தைகளின் விவரம்

| விவரம் | ஆண் குழந்தை | பெண் குழந்தை | மொத்தம |
|---|---|---|---|
| தொட்டில் குழந்தை திட்டத்தில் 1992 முதல் மார்ச் 2018ம் ஆண்டு வரை வந்த குழந்தைகள் | 1017 | 4114 | 5131 |

*ஆதாரம்: தமிழ் நாடு அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, கொள்கை விளக்கக் குறிப்பு 2018-2019*

7. குழந்தைகள் இல்லத்தில் உள்ள குழந்தைகள் (Children in Institutional Care)

| விவரம் | தமிழ் நாடு |
|---|---|
| அரசு குழந்தைகள் இல்லம் | 44 |
| Open Shelter | 8 |
| தன்னார்வ தொண்டு நிறுவன குழந்தைகள் இல்லம் | 1215 |
| மொத்தக் குழந்தைகள் இல்லம் | 1267 |

*ஆதாரம்: சமூக பாதுகாப்பு துறை, தமிழக அரசு*

மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் குழந்தைகளின் தேவைகள் இன்னும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும், அவர்கள் இன்னும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சூழலில்தான் உள்ளனர் என்பதும் தெரியவருகின்றது.

குழந்தைகள் குடும்பங்களிலேயே வளர வேண்டும் என்றும், அது குழந்தைகளின் உரிமை என்றும் சர்வதேச குழந்தை உரிமை சாசனம் கூறுகின்றது. எல்லா குழந்தைகளுக்கும் இந்த வாய்ப்பு கிடைப்பது இல்லை. பல குழந்தைகள் பிறந்த உடனேயே அனாதை ஆக்கப்படுகிறார்கள்; மற்றும் பல குழந்தைகள் குழந்தை பருவத்தில் பெற்றோர்களுடன் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. தமிழகத்தில் மட்டும் 1267 குழந்தை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் இல்லங்களில் ஏறத்தாழ 5000 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதுமே இதற்கு சான்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே குழந்தைகள் குடும்பம் சார்ந்த முறைகளில் பராமரிக்கப்பட வேண்டும், அதற்குத் தேவையான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது. அனாதையாக்கப்பட்ட குழந்தையை தத்து கொடுப்பதின் மூலமாக ஒரு குடும்பத்தில் பாசம் மிகுந்த உறுப்பினராக இருக்க இயலும்; இருப்பினும் இது எல்லா நேரங்களிலும் சாத்தியமாக அமைவது இல்லை. எனவே தத்து கொடுத்தல் நீங்கலாக பிற வழிகளிலும் ஆதரவற்ற குழந்தைகள் தகுதி வாய்ந்த குடும்பங்களோடு இணைக்கப்பட வேண்டும் என்பது முக்கியமாகின்றது. அரசாங்கமும் மாற்று முறைகளில் குடும்ப பராமரிப்பு முறையை உறுதி செய்வதற்குரிய திட்டங்களை முன்னெடுத்து செல்கின்றது.

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் குழந்தைகளின் மாற்று பராமரிப்பு முறையை (Alternate Care) மூன்று விதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.




இக்கையேடு மாற்று குடும்ப முறையை முன்னெடுத்து செல்வதற்கான வழிமுறைகளையும், இம்முறையின் முக்கியத்துவத்தை பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இச்செயலில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கும் குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுக்கும் இன்றியமையாத தகவல் கோப்பாக இருக்கும் என நம்புகின்றோம்.

கற்க கசடற:

- குழந்தைகளுக்கு குடும்பங்களில் வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதை சர்வதேச குழந்தை உரிமை சாசனம் கூறுகின்றது.
- குழந்தைகள் குடும்பம் சார்ந்த முறைகளில் பராமரிக்கப்பட அதற்குத் தேவையான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
- குழந்தை பராமரிப்பை மூன்று முறையாக ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் குறிப்பிடுகின்றன.



# மாற்று பராமரிப்பு முறையின் முக்கியத்துவம்

## (Importance of Alternate care)

அத்தியாயம் - 2

# மாற்று பராமரிப்பு முறையின் முக்கியத்துவம்

## 2.1 மாற்று பராமரிப்பு முறை ஏன் தேவைப்படுகின்றது?

பொதுவாக ஆதரவு தேவைப்படும் குழந்தைகளை இல்லங்களில் வைத்து பராமரித்து வருவது என்பது ஒரு பழமையான முறை ஆகும். இந்த இல்லங்கள், அனாதை விடுதிகள், கருணை இல்லங்கள் போன்ற பல பெயரில் காணப்படுகின்றன.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் குழந்தைகள் குறித்தும், குழந்தைகள் வளர்ச்சி குறித்தும் பல விதமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக குழந்தைகளின் மன வளர்ச்சி குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இம்மாதிரியான இல்லங்களில் வளரும் குழந்தைகள் மன உளைச்சல், அதிக கோபம், மற்றும் சமுதாயத்திற்கு எதிரான சிந்தனைகள் போன்ற பல்வேறு விதமான மனம் சார்ந்த பிரச்சனைகளால் தாக்கப்படுகின்றனர் என்பதை ஆராய்ச்சிகளின் அடிப்படையில் வல்லுநர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மூளை வளர்ச்சி மற்றும் மூளை வேலை செய்யும் முறைகளை ஆராய்ந்த போது மூளை வளர்ச்சி கிட்டத்தட்ட 80%; குழந்தைகளுக்கு 5 வயது ஆவதற்கு முன்பே பூர்த்தியடைகின்றது என்பது அறியப்பட்டது. குழந்தையின் மூளை வளர்ச்சியானது வன்முறையில் தூண்டப்படாமல் இருப்பதற்கு நிலையான, அன்பான குடும்ப உறவுகள் அவசியமாக தேவை என்பதும் அறியப்பட்டது.







ஜிம்பாப்வே பல்கலைகழகத்தில் குழந்தை நலம் சார்ந்த மருத்துவதுறையில் குழந்தை வளர்வதற்கும் அவர்களுடைய சூழலுக்கும் இடையே ஏறபடக்கூடிய விளைவுகள் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். குறிப்பாக நல்ல குடும்ப சூழலில் வாழும் குழந்தைகள் மற்றும் இல்லங்களில் வாழும் குழந்தைகளின் இரண்டு, மூன்று வயதுகளில் ஏற்படும் மூளை வளர்ச்சி குறித்து விரிவாக ஆராய்ந்தார்கள். அதன் அடிப்படையில் இல்லங்களில் வாழும் அல்லது புறக்கணிக்கப்பட்ட குழந்தைளின் மூளை வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டதை கண்டறிந்தார்கள். இந்த ஆராய்ச்சியில் குழந்தைகள் இல்லங்களில் வாழ்வதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தகுந்த ஆதாரத்துடன் காண்பிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பல்வேறு நாடுகளில் இது குறித்த

ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆராய்ச்சிகள் அனைத்துமே குழந்தைகளின் வளர்ச்சியும் மன நலமும் இல்லங்களில் வாழும்பொழுது வெகுவாக பாதிப்பதை உறுதி செய்கின்றது.



இணைப்பு கோட்பாடு (Attachment Theory) குழந்தைகளுக்கு உறவு பாலங்கள் முக்கியம் என்று ஆராய்ச்சிகளின் அடிப்படையில் தெரிவித்தது. உறவுகளற்ற சூழ்நிலையில் வாழும் குழந்தைகளின் மனவளர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. இத்துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் இல்லங்களில் வாழும் குழந்தைகளைக் கவனமாக ஆராய்ச்சி செய்து குடும்பங்களில் வாழும் குழந்தைகளைவிட இவர்கள் அதிக அளவிற்கு பாதிக்கப்படுகின்றனர் என்பதை பதிவு செய்துள்ளார்கள்.

பாலியல் வன்கொடுமை, உடல் ரீதியான துன்புறுத்தல், மனதை காயப்படுத்துதல் மற்றும் புறக்கணித்தல் போன்றவை குழந்தை இல்லங்களில் பரவலாக காணப்படுகின்றது. இவைகள் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.



ஒரு குடும்பத்தில் வாழும் போது, ஒரு குழந்தை சமூக கட்டமைப்புப் பற்றியும், குடும்பம் சார்ந்த மதிப்பீடு பற்றியும், தனிமனித மாண்புகளை வளர்த்து கொள்வதின் அவசியத்தை பற்றியும் புரிந்து கொள்கின்றது. குடும்பத்தில் உள்ள தாய், தந்தை அல்லது வேறு உறவினர்கள் மூலமாக இவ்வுலகத்தை பார்க்க கற்றுக் கொள்கின்றது. குடும்பம் சார்ந்த உறவுகளை வளர்த்துக் கொள்கின்றது. ஒரு சமுதாயத்தில் எவ்வாறு பழக வேண்டும் என்று குடும்பம் வாயிலாக குழந்தை கற்றுக் கொள்கின்றது.



இத்தகைய ஒரு சந்தர்ப்பம் இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. இல்ல நெறிமுறைகள் என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே அவர்கள் வாழ்கின்றார்கள். அன்பு, பாசம், உறவிற்க்காகத் தியாகம் செய்தல், பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுதல் போன்ற மாண்புகளுக்கு பதிலாக, இல்லங்களில் உள்ள நடைமுறைகளை பின்பற்றியே 18 வயது வரை வளர்ந்துவிடுகின்றார்கள். 18 வயதிற்கு பிறகு அவர்கள் இல்லத்தை விட்டு வெளியே வந்து தானாக வாழ்க்கையைத் துவங்கும்பொழுது, சமுதாயத்தில் நுணுக்கமாக பின்னி பிணைந்துள்ள உறவுகளையும், மதிப்பீடுகளையும் அங்கீகரித்தோ அல்லது ஏற்று நடப்பதற்கோ

குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் ஒருவரோடு மட்டுமாவது மனரீதியான ஒட்டுதல் தேவை

இயலாமல் போகின்றது. தனி மனித வளர்ச்சியில் ஏற்படும் பின்னடைவு இவர்களுக்கு இயல்பாக இருப்பதன் காரணமாக பலவிதமான பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகின்றது.

இந்த பிரச்சனைகளை நன்கு புரிந்துக்கொண்டதன் மூலமாக, குழந்தைகள் குடும்பங்களில் வாழ இயலாத சூழலில், மாற்று வழி மற்றும் குடும்பத்தில் இணைந்த வழிகளிலேயே அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அரசாங்கங்கள் அதற்கென செயல்திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்து உலகளவில் முன்வைக்கப்பட்டது. மாற்று பராமரிப்பு முறை மீதான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டு நெறிகளும் இதை உறுதி செய்கின்றது. இக்கருத்து இந்தியாவிலும் 2013-ம் வருடம் குழந்தைகளுக்கான செயல்திட்டம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கற்க கசடற:

- மாற்று பராமரிப்பு முறை மனித வளத்தை மேம்படுத்துவதற்கான மூலதனங்களில் ஒன்றாக உள்ளது.
- குழந்தையின் மூளையானது பிறப்பின் பொழுது 25%, மூன்று வயதிற்குள் 75% வளர்ச்சியடைகின்றன. இந்த மூளை வளரச்சி முழுமையடைய அடிப்படையாக அமைவது குழந்தை வாழும் சுற்று சூழல் மற்றும் பராமரிக்கும் நபர் அளிக்கும் தூண்டுதல் செயல்பாடுகள் ஆகும்.
- குழந்தைக்கு உறவுகள், வளர்ச்சிக்கான முக்கிய பாலமாக உள்ளது.
- குழந்தை ஒரு குடும்பத்தில் இணைந்து வாழ்வதால் சமூக பழக்க வழக்கம், குடும்பம் சார்ந்த மதிப்பீடு மற்றும் ஒரு மனிதனின் மாண்பு போன்றவற்றை எவ்வாறு வளர்த்து கொள்ள வேண்டும் என்பதை புரிந்து கொள்கின்றன.



# குழந்தைகளின் மாற்று பராமரிப்பு முறை குறித்த சர்வதேச நெறிமுறைகள்

(United Nations Guidelines on Alternate Care for Children)

அத்தியாயம் - 3

# குழந்தைகளின் மாற்று பராமரிப்பு முறை குறித்த சர்வதேச நெறிமுறைகள்

## 3.1 சர்வதேச குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989

சர்வதேச குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989-ம் வருடம் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்திய அரசு இவ்வுடன்படிக்கையை 1992-ம் வருடம் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டது. இவ்வுடன்படிக்கையின் படி குழந்தை தாய், தந்தையுடன் பராமரிக்கப்பட வேண்டும் என உரிமை உள்ளது. விதி 7,8,9-ன் படி குழந்தை பல்வேறு காரணங்களுக்காக பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுமாயின், அரசு குழந்தையின் சீரிய நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டுகின்றது. விதி-20 மாற்று குடும்ப முறையின் வழிகளைப் பற்றி கூறுகிறது.

மேலும், குழந்தைகள் குடும்பங்களில் பராமரிக்கப்படும் பொழுது குழந்தைகளுக்கு எல்லாவிதமான கொடுமைகள் மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை உள்ளது. கல்வி மற்றும் ஆரோக்கியத்தை பேணப்படுவதற்கான உரிமை, தம்மைப்பற்றிய கருத்துக்களை கூறுவதற்கான உரிமைகள் உண்டு என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

| | |
|---|---|
| விதி. 7 & 8 : | தனக்கென்று ஒரு பெயர், தேசிய இனம், பெற்றோர் பற்றிய தகவல்கள், அவர்களால் பராமரிக்கப்படுவது போன்றவற்றிற்கு, ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு. |
| விதி. 9 : | குழந்தையின் நலனுக்கு பாதிப்பு இருந்தால் தவிர, தன் பெற்றோருடன் வசிக்க குழந்தைக்கு உரிமை உண்டு. ஒருவேளை, பெற்றோர்களிடமிருந்து பிரிந்திருந்தால், அவர்களுடன் தொடர்பு வைக்க உரிமை உண்டு. |
| விதி. 10 : | குழந்தையோ, அதன் பெற்றோரோ, எந்த நாட்டில் இருந்தாலும், அதை விட்டு, சொந்த நாடு திரும்பி, ஒன்று சேர உரிமை உண்டு. பெற்றோர், குழந்தை உறவை நிலைநாட்டிக் கொள்ள உரிமை உண்டு. |
| விதி. 11 : | குழந்தைகளைச் சட்டத்திற்கு புறம்பாக தத்து கொடுப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். |
| விதி. 12 : | தம்மை பாதிக்கும் விஷயங்களில் குழந்தைகள் தங்கள் கருத்தை சுதந்திரமாக எடுத்துக் கூறவும், அவை மதிக்கப்படவும் உரிமை உண்டு. |
| விதி. 20 : | குடும்பம் இல்லாத குழந்தைகளுக்கு சிறப்பு (விசேஷ) கவனிப்பு தேவை. அவர்களின் கலாச்சார பின்னணிக்கு ஏற்ப, பொருத்தமான மாற்று குடும்ப அமைப்பின் மூலம் கவனிக்கப்பட வேண்டும். |
| விதி. 21 : | குழந்தைகள் தத்து கொடுக்கப்படும் பொழுது, அவர்களின் நலனே முக்கிய காரணியாக இருக்க வேண்டும். |

## 3.2 மாற்று பராமரிப்பு முறைக்கான சர்வதேச நெறிமுறைகள்:

2010-ம் வருடம் குழந்தைகளின் உரிமைகளை சார்ந்து, குறிப்பாக மாற்று பராமரிப்பு குறித்த சில நெறிமுறைகளை பற்றி ஐ.நா சபை வெளியிட்டுள்ளது. குழந்தை உரிமைகளை சார்ந்து கூறப்பட்டுள்ள இந்நெறிமுறைகள் குழந்தையின் பாதுகாப்பு மற்றும் நலன் பேணும் உரிமைகளை பலப்படுத்துவதற்காகவும், குடும்பங்களிலேயே குழந்தைகள் பராமரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் உறுதி செய்வதற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கங்கள் தத்தம் நாட்டில் குழந்தைகளின் உரிமைகளின் சார்பில் கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும்பொழுது இந்த வழிகாட்டு நெறிகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. குழந்தை உரிமைகள் சாசனம் போன்று வழிகாட்டு நெறிகள் கட்டாயமாக்கப்படவில்லை என்றாலும் மாற்று வழிகளில் குழந்தைகள் பராமரிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் அதற்கான தேவைகளையும் எடுத்துரைக்கும் சிறந்த வழிகாட்டி நெறியாக இது விளங்குகின்றது. இதன் அடிப்படையில் மாற்று பராமரிப்பு ஆவணம், பெற்றோர் பராமரிப்பற்ற குழந்தைகளை பராமரிக்கும் விதத்தை பற்றி கூறுகின்றது.

குறிப்பாக:-

1. உறவுகளால் பராமரித்தல் (Kinship Care)
2. மாற்று குடும்ப முறை (Foster Care)
3. குடியிருப்பு பராமரிப்பு (Residential Care)
4. குழந்தைகளுக்கான சுதந்திரமான வாழ்க்கை முறைகளை மேற்பார்வை செய்தல் (Supervised Independent Living Arrangements for Children)

இந்த வழிகாட்டி நெறிகளில் தத்து கொடுத்தல் நீங்கலாக குடும்பங்களை வலுப்படுத்துதல் மற்றும் குடும்ப சிதைவுகளிலிருந்து பாதுகாத்தல், மாற்று குடும்பங்களில் குழந்தைகளை இணைத்தல் போன்ற அனைத்து வடிவங்களைக் குறித்து பேசப்பட்டுள்ளது.

தத்துகொடுத்தல் நீங்கலாக பிற முறைகளை பற்றியும் உலகளவில் தரத்தை நிர்ணயம் செய்யும் முக்கியமான கோட்பாடாக இந்த வழிகாட்டி நெறிகள் விளங்குகின்றன.

இந்த நெறிமுறைகள் இரண்டு மையக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.

1. குழந்தைகள் குடும்பங்களிலேயே பெற்றோரால் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனர் என்பதை உறுதி செய்வதன் மூலம் குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதையும், கைவிடப்படுவதையும் தவிர்க்க இயலும். எனவே, அரசாங்கம் இதற்கான சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

2. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் குழந்தைகள் புறக்கணிக்கப்பட்டாலோ அல்லது கைவிடப்பட்டாலோ, அக்குழந்தையின் சீரிய நலனை பேணி பாதுகாக்கும் பொருட்டு, தகுதி வாய்ந்த குடும்பங்களிலேயே பராமரித்து வளர்க்கப்பட வேண்டிய சூழலை கூடிய விரைவில் ஏற்படுத்தித் தருதல்.

இந்த முறையின்படி இரண்டு மைய கோட்பாடுகள் இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளது.

**கோட்பாடுகள் (Principles)**

**தேவை கோட்பாடு (The Necessity Principle)**

**பொருத்தக் கோட்பாடு (The Suitability Principle)**

முறையான தகுதிவாய்ந்த நிறுவனங்களின் நபர்கள் மூலம் குழந்தைகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மாற்று பராமரிப்பு முறைகள் குழந்தைகளின் சிறப்பு தேவைகளை மையப்படுத்தி அமைவதை உறுதி செய்ய வேண்டும்.

**வருமுன் காத்தல்**

இக்கருத்து மாற்று பராமரிப்பு முறைகளுக்கான தேவை ஏற்படும் சூழ்நிலைகளை ஆராய்ந்து அத்தகைய சூழல்கள் நிகழாதிருக்க அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளைக் குறிக்கும்.

**குழந்தைகளை மாற்று பராமரிப்பு முறைகளைத் தேடுவதற்கான அவசியத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்.**

- அரசாங்கங்கள் வறுமையை ஒழிப்பதற்கான செயல்திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதைத் தடுக்க கூடிய செயல் திட்டங்களை உருவாக்குதல்.
- குடும்பங்கள் சிதைவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, குடும்ப நலனை பேணிக்காத்தல்.
- குடும்பங்களில் வளரும் குழந்தைகளுக்கான சிறப்பு சலுகைகள், பகுதி நேர, பகல் நேர குழந்தை பராமரிப்பு திட்டம் போன்றவை மேற்கொள்ளுதல்.

*கற்க கசடற:*

- சர்வதேச குழந்தை உரிமைகள் சாசனப்படி குழந்தை தாய், தந்தையால் பராமரிக்கப்பட வேண்டும்.
- பல்வேறு காரணங்களுக்காக குழந்தை பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் நிலையில், குழந்தையின் சீரிய நலனை கருத்தில் கொண்டு அரசு அதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.
- 2010-ம் வருடம் உலகளாவிய மாற்று பராமரிப்பு குறித்த சில நெறிமுறைகளை ஐ.நா சபை வெளியிட்டுள்ளது.
- குழந்தை பராமரிப்பு முறைகள், தத்து குடும்பங்களை வலுப்படுத்துதல், மாற்று குடும்பங்களில் குழந்தைகளை இணைத்தல் போன்ற அனைத்தும் உலகளாவிய மாற்று பராமரிப்பு நெறிமுறைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



# மாற்று குடும்ப முறை
(Foster Care)

அத்தியாயம் - 4

# மாற்று குடும்ப முறை

## 4.1 வரையறை (Definition):

ஒரு குழந்தையின் சொந்த குடும்பம் அல்லாத மாற்று ஒரு குடும்பத்தைத் தேர்வு செய்து, முறையாகப் பயிற்சி அளித்து, அத்தகைய குடும்பங்களில், பெற்றோரால் பராமரிக்க முடியாத குழந்தைகளை இணைத்து, அவர்களுக்குரிய தகுந்த பராமரிப்பும், போதிய கவனமும், அன்பும் கிடைப்பதை முறைப்படுத்தப்பட்ட மேற்பார்வை மூலம் உறுதி செய்தல், என்பதே மாற்று குடும்ப முறை என்று குறிப்பிடப்படுகின்றது.

### 4.1.1 மாற்று குடும்ப முறையின் வழிமுறைகள்:

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை குடும்பத்தில் வளர்ப்பதற்கான வாய்ப்பை உருவாக்கி தருதல்

- குழந்தையை தேர்ந்தெடுத்தல்
- மாற்று குடும்பத்தில் செல்வதற்கு குழந்தையை ஆயத்தப்படுத்துதல்

- குடும்பங்கள் தேர்வு செய்தல்.
- குழந்தை பராமரிப்பு குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுதல்.
- குடும்பங்களுடன் குழந்தையை இணைத்தல்

தொடர் கண்காணிப்பு மற்றும் ஆதரவு

## 4.2 மாற்று குடும்ப முறையின் வகைகள் (Types of Foster Care):

### 4.2.1 தத்து கொடுப்பதற்கு முன் கொடுக்கப்படும் மாற்று குடும்ப முறை (Pre Placement Foster care)

மாற்று குடும்ப முறை என்பது ஒரு குழந்தையைத் தத்து கொடுப்பதற்கு முன்பு அக்குடும்பத்தோடு சேர்ப்பதை குறிக்கின்றது. சட்டரீதியாக அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற குழந்தைகள் அக்குடும்பத்தில் தத்து குழந்தைகளாக ஆவதற்கு சிறிது காலம் எடுக்கலாம். இந்த இடைப்பட்ட காலத்தில் இக்குழந்தைகள் இக்குடும்பங்களில் வளரலாம். இதையே நாம் தத்து கொடுப்பதற்கு முன் கொடுக்கப்படும் மாற்று குடும்ப முறை என்று அழைக்கின்றோம்.



இந்தியாவில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் நிராதரவாக்கப்படும்பொழுது (கைவிடப்படும்போது) அவர்கள் குழந்தை நல குழு (CWC-Child Welfare Committee) முன்பு முன்னிலை (ஆஜர்) படுத்தப்படுகிறார்கள். இக்குழந்தைகளை முறையான வழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களில் தத்து கொடுப்பதே சிறந்த முறையாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இக்குழந்தைகள் தத்து கொடுப்பதற்கு சட்டரீதியாக தகுதி வாய்ந்தவர்கள் என்ற அறிக்கை அளிப்பது குழந்தை நல குழுவின் முக்கிய பணியாகும். இவ்வாறு அறிவிக்கப்பட்ட குழந்தைகளை, தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களில், குழந்தை நல பாதுகாப்பு அலுவலா் மற்றும் குழந்தை நல குழுவும் இணைந்து தத்து கொடுப்பதற்கான விதிமுறைகளையொட்டி இக்குடும்பங்களில் குழந்தைகளை இணைக்கலாம்.

### 4.2.2 மாற்று குடும்ப முறை (Foster Care)



தற்சமயம் மாற்று குடும்ப முறைதான் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இல்லங்களில் உள்ள குழந்தைகள் அல்லது குழந்தை நல குழுவின் முன் ஆதரவற்ற குழந்தை என்று பதிவு செய்யப்படும் குழந்தைகளையே, அவர்களின் பராமரிப்பு மற்றும் நலன் கருதி தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி வாய்ந்த பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இவ்வாறு குழந்தைகளை பராமரிப்பதற்கு அரசினால் ஒரு மாதத்திற்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 2000/- வீதம் அளிக்கப்படுகின்றது. குறுகிய கால பராமரிப்பு குறிப்பாக படிப்பை முடிக்கும் வரையில் குழந்தைகளை இக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு மாற்று குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர். இந்த திட்டம் மாவட்டந் தோறும் உள்ள குழந்தை பாதுகாப்பு அலகு மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### 4.2.3 குழு மாற்று குடும்ப முறை (Group Foster Care)

குழந்தைகளை ஒரு குடும்பம் போன்ற அமைப்பில், பெற்றோா் இல்லாமல் மற்றவர்களால் பராமரிக்கப்பட்டு வரும் பொழுது அது குழு மாற்று குடும்ப முறை என்று கூறப்படுகின்றது.

இளைஞா் நீதிச்சட்டம் பிரிவு -2 (32)ன் படி குழு மாற்று குடும்ப முறை என்பது பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு, தனிப்பட்ட பராமரிப்பும், பாதுகாப்பும், நல்ல வளர்ப்பு சூழலும் தரக்கூடிய ஒரு குடும்பம் போன்ற அமைப்பு ஆகும் இம்முறை குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த தீர்வாக கருதப்படுகின்றது.



குழந்தைகள் இல்லம் போல் இல்லாமல் இங்கு அதிகபட்சம் 8 குழந்தைகளே பராமரிக்கப்படுகின்றார்கள். குழந்தைகளுக்கு தனிப்பட்ட கவனம் அளித்து அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்கான அனைத்து

சந்தர்ப்பங்களையும் அளிப்பதாக கருதப்படுகின்றன. தற்பொழுது நம்நாட்டில் பல பகுதிகளில் SOS குடும்பம் இயங்கி வருவதை ஓரளவு இம்முயற்சிக்கு (குழு மாற்று குடும்ப முறையை செயல்படுத்தும்) ஏற்றதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

> மாற்று பராமரிப்பு முறையில் SOS குடும்பம் தனித்தன்மை மற்றும் நீண்ட கால உறவு வாய்ந்த நிறுவனமாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. தாய், தந்தை அற்ற (அனாதைக்குள்ளான) குழந்தைகள் அல்லது பெற்றோரின் பராமரிப்பு இன்றி கடினமான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் ஆகியோரின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்வது SOS குடும்பத்தின் நோக்கமாகும்.
>
> SOS குடும்பத்தில் ஒவ்வொருவரும் குழந்தையின் சகோதர சகோதரி மற்றும் தாய் போன்ற நிலையில் இருந்து, இக்குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்துகின்றனர்.

### 4.2.4. உறவினர் வளர்ப்பு மாற்று குடும்ப முறை (Kinship Foster Care)

குடும்ப உறவுகளின் மூலம் குழந்தையை வளர்ப்பதே உறவினர் வளர்ப்பு பராமரிப்பு முறை ஆகும். இது சமுதாயத்தில் பரவலாக காணப்படுகின்ற குழந்தை பராமரிப்பு முறை ஆகும். பெற்றோர் இல்லாத அல்லது சரிவர பராமரிக்க முடியாத சூழலில் உள்ள குழந்தைகளுக்கு அவர்களது பாட்டி, தாத்தா, மற்ற உறவினர்கள் மூலம் மனமுவந்து அவர்களை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள்.



அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, போன்ற நெருங்கிய சொந்தங்கள் அவர்களுடைய நெருங்கிய உறவினரின் குழந்தைகளை பராமரித்து வருவதை காணலாம். இம்முறையில் குழந்தைகளுக்கு குடும்பத்தில் வாழ்கின்றோம் என்ற உணர்வு ஏற்படுவதால் குடும்ப பந்தம் உறுதி செய்யப்படுகின்றது. இயல்பாக அன்பு பாலங்கள் ஏற்படுத்திக்கொள்ள இந்த முறை வசதியாக உள்ளது. இதன் காரணமாக அவர்களுடைய வளர்ச்சி நன்முறையில் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகின்றன. அதேசமயம் அவர்களுக்கு பாரபட்சமான கவனிப்பும் கிடைக்கலாம். அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையும் ஏற்படலாம். சில சமயம் பல விதமான கொடுமைகளுக்கும் உள்ளாகலாம். எனவே, இம்முறை செயல்பட மிகுந்த கண்காணிப்பு தேவைப்படுகின்றது இருப்பினும் இம்முறை ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை.

திட்டத்தின்படி மேலே குறிப்பிட்ட நான்கு முறைகளின் மூலமே குழந்தைகள் குடும்பங்களில் வாழும் சூழலை உருவாக்கலாம் என்று அரசு கூறுகின்றது. இருப்பினும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் சமுதாயத்தில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் எவ்வாறு உறவினர்களால் வளர்க்கப்படுகின்றார்கள், அவர்களது வளர்ப்பு முறை சீராக இருக்கின்றது என்ற முடிவுக்கு வரும் பொழுது அக்குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றது.

## 4.3 தத்து கொடுத்தல் மற்றும் மாற்று குடும்ப முறையின் வேறுபாடுகள்

| வ.எண் | தத்து கொடுத்தல் | மாற்று குடும்ப முறை |
|---|---|---|
| 1. | நிலையானது | தற்காலிகமானது |
| 2. | தத்து பெற்றோர், பெற்றோருக்குரிய சட்ட அந்தஸ்து மற்றும் அங்கீகாரம் பெறுவார்கள். | மாற்று குடும்ப பெற்றோர் எக்காலத்திலும் சொந்த பெற்றோர் ஆக முடியாது. |
| 3. | சட்டரீதியாக நீதிமன்றங்கள் மூலம் தத்து எடுத்தது உறுதி செய்யப்படுகின்றது. | நீதிமன்றங்களுக்கு செல்ல தேவையில்லை. சட்டரீதியான அங்கீகாரம் கிடையாது. |
| 4. | தத்து எடுக்கப்பட்ட குழந்தை அவர்களுடைய சொந்த குழந்தை போன்று எல்லா அங்கீகாரங்களையும் பெறுகின்றது. | மாற்று குடும்பத்தில் இணைக்கப்பட்ட குழந்தை, அவர்களுடைய சொந்த குழந்தை ஆக வாய்ப்பு இல்லை. |
| 5. | குழந்தை பெற்றோரின் பெயருக்கும் குடும்ப சொத்துக்கும் வாரிசுதாரர் ஆகின்றார் | வாரிசாக முடியாது. |
| 6. | எக்காரணம் கொண்டும் குழந்தையை தத்துப் பெற்றோர்கள் நிறுவனத்திடம் திருப்பி தர இயலாது. | குழந்தை பெற்றோர்களுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படும்பட்சத்தில் குழந்தை நிறுவனத்திற்கு திரும்பி வந்துவிடலாம். |
| 7. | தத்து எடுப்பதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்யாது. | மாற்று பெற்றோர்களுக்கு மாதந்தோறும் நிதி உதவி வழங்கப்படுகின்றன. |

**கற்க கசடற:**

- மாற்று குடும்ப முறை என்பது குடும்பங்களை தேர்வு செய்து பயிற்சி அளித்து அக்குடும்பத்தில் குழந்தையை இணைத்தல் ஆகும்.
- ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் உள்ள முறைகளின் மூலம் குழந்தைகள் குடும்பங்களில் வாழும் சூழலை உருவாக்கலாம் என்று அரசு வலியுறுத்துகின்றது.
- மாற்று குடும்ப முறையின் வகைகள்:
  1. தத்து கொடுப்பதற்கு முன் கொடுக்கப்படும் மாற்று குடும்ப முறை (Pre Placement Foster Care)
  2. மாற்று குடும்ப முறை (Foster Care)
  3. குழு மாற்று குடும்ப முறை (Group Foster Care)
  4. உறவினர் வளர்ப்பு மாற்று குடும்ப முறை (Kinship Foster Care)
- குழந்தை தத்து கொடுத்தல் என்பது நிலையானது. மாற்று குடும்ப முறை தற்காலிகமானது.



# இந்தியாவில் மாற்று குடும்ப முறை

(Foster Care in India)

அத்தியாயம் - 5

# இந்தியாவில் மாற்று குடும்ப முறை

## 5.1 இந்தியாவில் மாற்று குடும்ப முறை-காலக் கண்ணாடி வழியே:-

மாற்று குடும்ப முறை நமது இந்திய கலாச்சாரத்திற்கு புதுமையானது அல்ல. சிறையில் கிருஷ்ணனை ஈன்றெடுத்த பெற்றோர், குழந்தை வாழ்வதற்கான ஏற்ற இடம் சிறை அல்ல என்பதற்காகவும், குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதற்காகவும் பிறந்தவுடன் குழந்தையைக் கோகுலத்தில் உள்ள யசோதை வீட்டில் சென்று சேர்த்தார்கள். யசோதை நமது கலாச்சாரத்தின் வழியே காணும் ஒரு மாற்றுத் தாய். அது மட்டுமல்ல நந்தவனத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆண்டாளுக்கு பெரியாழ்வரும், அவரது மனைவியுமே பெற்றோராக இருந்து பராமரித்தனர்.



மாமா வீட்டில் அல்லது தாத்தா, பாட்டியுடன் வசித்தல் என்பது 50 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்று வந்த இயல்பான ஒரு சமூக நிகழ்வாக இருந்தது. கூட்டு குடும்பங்கள் கால கட்டத்தில் கரைந்து போன பின் குழந்தைகள் இம்மாதிரி உறவினர்களின் பராமரிப்பில் வளர்வது என்பது இல்லாத ஒன்றாகிவிட்டது. தற்பொழுது பாதுகாப்பற்ற குடும்ப சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்குக் குடும்பங்களில் வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தருவது என்பது அரசாங்கத்தின் கடமையாக உள்ளது. இதற்கு முன்னோடியாக உலகளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு உடன்படிக்கைகளை குறிப்பிடலாம்.

1. சர்வதேச குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை
2. சர்வதேச மாற்று குடும்ப முறையின் நெறிமுறைகள்

இந்தியாவில் தத்து கொடுத்தல் நீங்கலாக மாற்று குடும்ப முறைகளில் அதிக அளவில் கவனம் செலுத்தப்படாமலேயே இருந்தது. ஒவ்வொரு முறையும் பேரிடர் தாக்கியபொழுது மாற்று குடும்ப முறையின் அவசியம் பற்றி உணரப்பட்டது; இருப்பினும் கி.பி. 2000-த்திற்கு முன்பு முறையான செயல்திட்டமாக வடிவமைக்கப்படவில்லை.

### 5.1.1 குழந்தைகள் சட்டம்:



கி.பி.1960ம் ஆண்டு குழந்தைகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தைகள் இல்லத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டது.

### 5.1.2 குழந்தை மற்றும் குடும்ப நல திட்டம்:

கி.பி. 1964ம் ஆண்டு முதல் முறையாக மத்திய சமூக நலவாரியம் (Central Social Welfare Board - CSWB) புதுடெல்லி, ஒரு முயற்சியை மேற்கொண்டது. அதன் அடிப்படையில் 3-வது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக குழந்தை மற்றும் குடும்ப நல திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியது. இதன் மூலம் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் அவர்களுடைய இல்லங்களுக்கு அருகிலேயே தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் வளர்க்கப்படக் கூடிய ஒரு செயல்பாட்டை உருவாக்கியது. இத்திட்டத்தின் படி சென்னையிலும் மற்றும் மும்பையிலும் மூன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயலாக்க முன் வந்தனர். இருப்பினும் இச்செயல்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தை குறித்த கண்காணிப்பு அறிக்கை ஏதும் தயார் செய்யப்படவில்லை.

### 5.1.3 இல்லங்களை மையப்படுத்தாத குடும்பம் சார்ந்த குழந்தைகளுக்கான செயல்திட்டம்:

கி.பி.1972ம் வருடம் முதல் முறையாக மகராஷ்டிரா மாநிலத்தில், இல்லங்களை மையப்படுத்தாத குடும்பம் சார்ந்த குழந்தைகளுக்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி மாற்று குடும்ப முறை குடும்ப சேவை மையம் (Family Service Centre) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் செயலாக்கப்பட்டது. எனினும் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. பின்னர் இத்திட்டம் அரசால் மேற்கொள்ளப்பட்டு தற்போது எச்.ஐ.வி (HIV - Human Immunodeficiency Virus) நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஒரு செயல் திட்டமாக செயல்படுகின்றது.

### 5.1.4 பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான திட்டம்:

கி.பி.1974ம் வருடம் மத்திய அரசின் சமூக நலத்துறை மூலம் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது இளவயதில் அனாதையாக்கப்பட்ட அல்லது நிராதரவாக கைவிடப்பட்ட குழந்தைளை குடும்பங்களில் பராமரிக்க முன் வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்பாட்டிற்கு வந்தது. மத்திய அரசு இதற்கான நிதி ஆதாரத்தை வழங்கியது. இத்திட்டம் நிதி பற்றாக்குறை காரணமாகவும், தகுந்த நிர்வாக அமைப்புகள் இல்லாமை காரணமாகவும் புறக்கணிக்கப்பட்டது.

### 5.1.5 மத்தியத் தத்தெடுப்பு வள அதிகார மையம் (Central Adoption Resource Authority - CARA)

கி.பி.1995ம் வருடம் தத்துகொடுத்தலை முறைப்படுத்துவதன் வழிகாட்டி நெறிகள் வெளியிடப்பட்டன. அதன் அடிப்படையில் மத்திய தத்தெடுப்பு வள அதிகார மையம் (Central Adoption Resource Authority) என்ற நிர்வாக அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. தத்துகொடுத்தலை முறைப்படுத்துவது இதன் முக்கிய பணி என உறுதி செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் தத்து கொடுக்கும் நிறுவனங்கள், தத்து கொடுக்க இருக்கும் குழந்தைகளை சட்டரீதியாக முறைப்படுத்துவதற்கு முன்பாக மாற்று குடும்பங்களுடன் குழந்தைகளை இணைத்தார்கள்.

இதன் மூலம் மாற்று குடும்ப முறையும் நடை முறைக்கு வந்தது. மேலும் தத்து கொடுப்பதற்கு முன்பாக சரிப்படுத்த வேண்டிய ஒரு பகுதியாக இம்முறை அமைந்துள்ளது. இது மாற்று குடும்பங்களாக கருதப்பட்டாலும் நாளடைவில்

சட்டரீதியான அங்கீகாரம் கிடைத்த பின்னர் இவர்கள் அக்குழந்தைகளுக்கு பெற்றோராக மாறுகின்றனர்.

## 5.1.6 ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் (Integrated Child Protection Scheme – ICPS):

கி.பி.2009ம் வருடம் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் இந்திய அரசால் கொண்டுவரப்பட்டது. மாநில அளவிலான குழந்தை பாதுகாப்பு சங்கம், மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு அலகுகளும் தோற்றுவிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் அனைத்து மாநிலங்களிலும் குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பிற்கான செயல் வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இச்செயல் திட்டத்தில் மாற்று குடும்ப வழிமுறைகள் பற்றி விரிவாக பேசப்பட்டுள்ளன.



## 5.1.7 இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் (Juvenile Justice (Care and Protection of Children) Act):




கி.பி.2000: இவ்வருடம் இளைஞர் நீதிச்சட்டம் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. முதன் முறையாக குழந்தைகளுக்கு புது வாழ்க்கை கொடுப்பதற்குரிய, சமுதாயத்தில் அங்கீகாரம் அளிக்கக்கூடிய வடிவத்தில் இச்சட்டம் உள்ளது என்று பேசப்பட்டது. தத்து கொடுத்தல் ஒரு நிலையான முறை என்றும் மாற்று குடும்ப முறை, நிதி ஆதரவு பெறுதல் ஆகிய இரண்டும் குழந்தைகள் குடும்பங்களை சார்ந்தே பராமரிக்கப்பட வேண்டிய ஒரு செயல்பாடு என்றும் கூறப்பட்டது.

கி.பி.2015: இவ்வருடம் இளைஞர் நீதி சட்டம் மறுபடியும் மாற்றியமைக்கப்பட்ட புது சட்டமாக கொண்டுவரப்பட்டது. முன்பு இருந்த இளைஞர் நீதி சட்டத்தின் தரவுகளை விரிவாக்கி, குழந்தைகள் குறித்த பல முன்னோடி கருத்துக்கள் இச்சட்டத்தின் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டன. அதில் முக்கியமான ஒன்று தத்து கொடுத்தல் மற்றும் மாற்று குடும்பங்கள் பற்றிய விதிகள் (ஷரத்துக்கள்) ஆகும். இச்சட்டத்தின் விதிகளின்படி அரசாங்கம் குழந்தைகளை மாற்று குடும்பங்களில் இணைக்கும்பொழுது எவ்வாறு செயல்பட வேண்டும் எத்தகைய நிதி ஆதாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கற்க கசடற:

- மாற்று குடும்ப முறை நமது இந்திய கலாச்சாரத்திற்கு புதுமையானது அல்ல. இந்தியாவில் ஆதரவற்ற குழந்தைகள் உறவினர் வீட்டில் வசித்து வந்தனர். இந்தியாவில் தத்து கொடுத்தல் நீங்கலாக மாற்று குடும்ப முறைகளில் அதிக அளவில் கவனம் செலுத்தப்படாமலேயே இருந்தது. ஒவ்வொரு முறையும் பேரிடர் தாக்கியபொழுது மாற்று குடும்ப முறையின் அவசியத்தை பற்றி உணரப்பட்டது. இருப்பினும் கி.பி. 2000ம் ஆண்டிற்கு முன்பு முறையான செயல்திட்டமாக வடிவமைக்கப்படவில்லை.
- குழந்தைகள் சட்டம் 1960
- குழந்தை மற்றும் குடும்ப நல திட்டம் 1964
- இல்லங்களை மையப்படுத்தாத குடும்பம் சார்ந்த குழந்தைகளுக்கான செயல்திட்டம் - 1972
- பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான திட்டம் 1974.
- மத்தியத் தத்தெடுப்பு வள அதிகார மையம் (Central Adoption Resource Authority - CARA) 1995 - தத்து கொடுத்தலை முறைப்படுத்துவதன் வழிகாட்டி நெறிகள் வெளியிட்டதுடன் மாற்று குடும்ப முறையும் நடை முறைக்கு வந்தது.
- ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் (Integrated Child Protection Scheme – ICPS) 2009: இத்திட்டத்தின் மூலம் அனைத்து மாநிலங்களிலும் குழந்தைகளுக்கு தேவையான பராமரிப்பிற்கான செயல் வடிவ மற்றும் மாற்று பராமரிப்பு முறை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளன.
- இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் (Juvenile Justice (Care and Protection of Children) Act 2000) - இளைஞர் நீதிச்சட்டம் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. முதன் முறையாக குழந்தைகளுக்கு புது வாழ்க்கை கொடுப்பதற்குரிய, சமுதாயத்தில் அங்கீகாரம் அளிக்கக்கூடிய வடிவத்தில் உள்ள ஒரு சிறப்பான சட்டமாகும்.

  2015 - இந்த வருடத்தில் இளைஞர் நீதி சட்டம் புதியதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் முக்கியமான ஒன்று தத்து கொடுத்தல் மற்றும் மாற்று குடும்பங்கள் பற்றிய விதிகள் (ஷரத்துக்கள்) ஆகும். இச்சட்டத்தின் விதிகளின்படி அரசாங்கம் குழந்தைகளை மாற்று குடும்பங்களில் இணைக்கும்பொழுது எவ்வாறு செயல்பட வேண்டும் எத்தகைய நிதி ஆதாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை நிர்ணயித்துள்ளன.



# மாற்று குடும்ப முறையின் அடிப்படை கொள்கைகள்

(Basic Principles of Foster Care)

அத்தியாயம் - 6

# மாற்று குடும்ப முறையின் அடிப்படை கொள்கைகள்

## அடிப்படை கொள்கைகள்:

1. எல்லா குழந்தைகளுக்கும் குடும்பத்தில் வளர்வதற்கு உரிமை உண்டு. குழந்தைகள் எல்லோரும் குடும்பங்களிலும் அல்லது குடும்பங்களையொத்த அமைப்பிலும் வளர்வதே சாலச் சிறந்தது ஆகும்.

2. எல்லா குழந்தைகளுக்கும் குடும்பங்களில் வளர்வதற்கான உரிமை உண்டு என ஏற்றுக் கொண்டதால், அரசாங்கம் ஆதரவற்ற குழந்தைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோரிடம் இணைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

   மேலும் குழந்தைகள் வளர்வதற்கு ஏற்ற சூழலாக குடும்பங்களை மாற்ற தகுந்த சிறப்பு செயல் திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும்.

3. மாற்று குடும்பங்களில் குழந்தைகளை இணைக்கும்பொழுது ஒவ்வொரு குழந்தையின் தனி தேவையை மையப்படுத்தப்பட வேண்டும். அக்குழந்தையின் தேவை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் குழந்தையின் சீரிய நலனை மேம்படுத்துவதற்கான செயல்பாடாகவும் இருக்க வேண்டும். இந்த முறைப்பற்றியும், மாற்று குடும்பத்தினரைப் பற்றியும் குழந்தையிடம் (அவன்/அவள்) தகவல் தெரிவிப்பதுடன் அங்கு சென்று வாழ்வதற்கான பயிற்சி அளித்தும் தயார் செய்ய வேண்டும்.

4. மாற்று குடும்ப முறைகளில் குழந்தைகளை இணைக்கும்பொழுது அவர்களுக்கு பங்கேற்கும் உரிமை உள்ளது என்ற கருத்தை கவனத்தில் வைக்க வேண்டும். எனவே இந்த முறையின் எல்லா கட்டத்திலும் குழந்தையின் ஒப்புதலை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நடவடிக்கை குறித்து ஆரம்பத்திலேயே அவர்களுக்கு தெளிவு படுத்தப்பட வேண்டும். தேவைப்படின் இதற்கு மாற்று குடும்ப அங்கத்தினரும் சட்ட வல்லுனர்களின் உதவியை நாடலாம்.

5. இரட்டை குழந்தைகள் அல்லது சகோதர, சகோதரிகளாக இருப்பின் அவர்கள் ஒரு குடும்பத்திலேயே இணைக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அவர்களை பிரிக்க ஏற்பாடு செய்யக் கூடாது. இவ்வாறான முயற்சியில் ஈடுபடும்பொழுது தேவைப்பட்டால் ஒரு குடும்பத்தில் இணைக்கப்படுவதற்கான குழந்தையின் எண்ணிக்கையை மாற்றி அமைக்கலாம்.

கற்க கசடற:

- எல்லா குழந்தைகளுக்கும் குடும்பத்தில் வளர்வதற்கு உரிமை உண்டு. இதை ஏற்றுக்கொண்டதால், ஆதரவற்ற குழந்தைகளை அவர்களது பெற்றோரிடம் இணைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றன.
- மாற்று குடும்பங்களில் குழந்தைகளை இணைக்கும்பொழுது ஒவ்வொரு குழந்தையின் தனி தேவை, பாதுகாப்பு, சீரிய நலன் போன்றவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். அதற்கான பயிற்சியை மாற்று குடும்ப பெற்றோருக்கு அளிக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு பங்கேற்கும் உரிமை உண்டு என்பதை கருத்தில் கொண்டு குழந்தையின் ஒப்புதலை பெறவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இரட்டை குழந்தைகள் அல்லது சகோதர, சகோதரிகளாக இருப்பின், அவர்கள் ஒரு குடும்பத்திலேயே இணைக்கப்பட வேண்டும்; எக்காரணம் கொண்டும் அவர்களை பிரிக்க ஏற்பாடு செய்யக் கூடாது.



# மாற்று குடும்ப முறையின் வழிமுறைகள்

## (Process of Placing Children in Foster Care)

அத்தியாயம் - 7

# மாற்று குடும்ப முறையின் வழிமுறைகள்

## 7.1 மாற்று குடும்ப முறையை செயல்படுத்தும் வழிமுறைகள்:

1. பெற்றோர்களை தேர்ந்தெடுத்தல்.
2. குழந்தையின் தேவைகளை ஆராய்ந்து குழந்தையை தேர்ந்தெடுத்தல்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுடன் குழந்தைகளை இணைத்தல்.
4. மேற்பார்வையிடுதல், கண்காணித்தல்.
5. பிரச்சனைகளை சந்தித்தல்.

### 7.1.1 பெற்றோர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பது ஏன்?

சாதாரணமாக அனைவருமே குழந்தைகளிடம் அன்பும், நேசமும் கொண்டவர்களாக இருப்பதை காண்கின்றோம். இருப்பினும் ஒரு சிலர் மட்டும் தான் தன்னுடைய குழந்தைகள் அல்லாத பிற குழந்தைகளிடம் அன்புகாட்ட கூடியவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சூழல்களில் இருக்கும் குழந்தைகளை ஏன் ஒரு சிலர் தாமாக முன்வந்து தம்முடைய குடும்பங்களிலேயே வைத்து வளர்க்க விரும்புகிறார்கள் என்ற கேள்விக்கு பதில் அளிப்பது மிக முக்கியமானது ஆகும். இதன் மூலம் அவர்கள் தகுதி வாய்ந்த மாற்று பெற்றோராக முடியும் அல்லது முடியாது என்பதை உறுதி செய்து கொள்ள முடியும்.

குழந்தை ஆராய்ச்சியாளர்கள் மூன்று அடிப்படை காரணங்களை குறிப்பிடுகின்றனர்:

1. சிலருக்கு இயல்பாகவே மனித நேயமும் குழந்தைகளின் மீது அன்பும் மேலோங்கி இருக்கின்றது. இது அவர்களுடைய அடிப்படை மாண்புகளில் ஒன்றாக இருப்பதை பார்க்கின்றோம். “வாடிய பயிரை காணும்போதெல்லாம் வாடினேன்” என்பதற்கு இணங்க வாடிய குழந்தைகளை கண்டால் உடனே அதை போக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். இது அவர்களுடைய மன இயல்பாகவே உள்ளது. இதை ஆங்கிலத்தில் இன்டிரின்ஸிக் வேல்யு - (Intrinsic Value) என்று கூறுகிறார்கள். பெரும்பாலான சமூக நல ஆர்வலர்களிடமும், மக்களை சார்ந்து வேலை செய்பவர்களிடமும் இக்குணம் மேலோங்கி இருப்பதை பார்க்கலாம். இது அவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார பின்னணியை பொறுத்து அல்ல; மாறாக அவர்களின் மன இயல்பை பொறுத்தது.

2. ஏதாவது ஒரு வகையில் அவர்கள் இம்மாதிரியாக செயல்படுவதற்கு பிறரால் ஊக்குவிக்கப்பட்டு இருப்பார்கள். தன்னுடைய வாழ்க்கையில் தன்னலமற்ற உயர்ந்த மனிதர்களை சந்தித்து இருக்கலாம். அவர்களைப் பின்பற்றி தன்னுடைய வாழ்க்கையை அமைத்து கொள்ளலாம் என்று நினைத்து இருக்கலாம். ஒரு சிலர் சிறந்த அறிஞர்களின் புத்தகங்களைப் படித்து ஈர்க்கப்பட்டு, அதன் மூலம் வித்தியாசமான வாழ்க்கை முறையை தேர்ந்தெடுக்க வேண்டும் என நினைப்பார்கள்.

3. ஒரு சிலர் சமுதாயத்தில் தன்னுடைய பங்களிப்பு இருக்க வேண்டும்; பிறருக்கு உதவ வேண்டும் என்று கருதுகிறார்கள். இதுபோன்று இருப்பவர்களிடம் தன் வாழ்க்கை மேம்பட்டு இருப்பதை போல சமுதாயத்தில் உள்ள மற்றவர்களின் வாழ்க்கையும் மேம்பட்டு இருக்க வேண்டும் என்ற எண்ணம் சிறப்பாக உள்ளது.

மேலே குறிப்பிட்ட இந்த மூன்று எண்ணங்களில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு மாற்று குடும்ப பெற்றோர்களாக முன்வருபவர்களிடம் காணலாம். இந்த மூன்று குணங்களில் ஏதேனும் ஒன்று மேம்பட்டு இருப்பினும் அவர்களாலும் சிறந்த மாற்று குடும்ப பெற்றோர்களாக முடியும். மாற்று குடும்பங்களில் பொருளாதார ஆதரவு, அரசாங்கம் அளிக்கின்றது என்றாலும் அதன் மூலமாக அதனுடைய தரத்தை நிர்ணயிக்க முடியாது. சரியான முறையில் இவர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமே மாற்று குடும்ப முறை குழந்தைக்கு சீரிய பலனளிக்கும் வகையில் சிறப்பாக உருவாக்க முடியும்.

### 7.1.2 மாற்று குடும்ப பெற்றோர்:

இந்திய இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ன் கீழ் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு, குழந்தை நல குழுவின் மூலம் உறவு இல்லாத குழந்தைக்கு தகுதி வாய்ந்ததாக கருதப்படும் ஒரு குடும்பத்தில் இணைக்க முடியும் என்று இச்சட்டம் (பிரிவு - 44) சொல்கின்றது. இத்தகைய மாற்று குடும்பங்களை சரியாக இனங்கண்டு தேர்ந்தெடுத்து முறையாக பயிற்சி அளிப்பது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரின் முக்கிய கடமை என்று இந்த சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. விதி44(2)ன் படி மாற்று குடும்பங்கள் தேர்ந்தெடுப்பது என்பது அவர்களுடைய நோக்கம், திறன், பலம் மற்றும் குழந்தைகளை பராமரிப்பதில் முன் அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று கூறுகின்றது.

இச்சட்டத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட மாதிரி விதிமுறைகளில் இரண்டை கீழே காணலாம

- விதி:23 (4)-ன் படி மாவட்ட குழந்தை பராமரிப்பு அலகு குழந்தைகள் சமூகம் சார்ந்து மாற்று குடும்ப முறையில் பராமரிக்கலாம் என்றும் அதற்கென தனிப்பட்ட குடும்பநல அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.
- விதி:23 (10)-ன் படி உடல் ஊனமுற்ற குழந்தைகளும், சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகளும் கூட மாற்று குடும்பங்களில் பராமரிப்பதற்காக இணைக்கப்படலாம் என்று கூறுகின்றது.

### 7.1.3 பெற்றோர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை:

(அ) தற்சமயம் உள்ள நடைமுறைகளின்படி பெற்றோர் மாற்று குடும்ப பெற்றோர்களாக விரும்பும்பட்சத்தில் அவர்கள் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அவர்களை சந்தித்து அவர்களுடன் உரையாடுவதன் மூலம் அவர்கள் உண்மையிலேயே குழந்தையின் நலனை பேணுவதற்காக இத்திட்டத்தில் இணைய உள்ளனரா என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆரம்பஉரையாடல்களின் மூலம் அவர்களது விருப்பம் உண்மையாக உள்ளது என்ற முடிவுக்கு வந்தால் அவர்களின் வீட்டிற்கு சென்று சந்திக்க வேண்டும். வீட்டிற்கு சென்று பார்த்த பிறகு அவரது விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து சான்றிதழ்களும் கிடைக்கப் பெற்ற பின் சமூக அலுவலரின் அறிக்கையுடன் குழந்தை நல குழுவிடம் (CWC-Child Welfare Committee) விண்ணப்பிக்க வேண்டும். அவர்களை குழுவின் முன் ஆஜர்படுத்தி அவர்களின் ஒப்புதலை பெற வேண்டும்.

மனரீதியாக அவர்கள் குழந்தையை பார்ப்பதற்கு முன்னர் மாற்று பெற்றோராக இருப்பதற்கு தீவிரமாக இருக்கிறார்களா என்று உறுதி செய்யப்பட வேண்டும். அதன் பின்னரே அவர்களுக்கு குழந்தையை காண்பிக்க வேண்டும்.

## 7.1.4 மாற்று குடும்ப பெற்றோரை தேர்ந்தெடுக்கும் பொழுது கவனிக்க வேண்டிய அடிப்படை கருத்துக்கள்:

### அ. வேலை மற்றும் நிதி நிலை சார்ந்த கருத்துக்கள்.

- பெற்றோர்கள் குறிப்பிட்ட வேலையில் உள்ளனரா அல்லது வேலையை அவ்வப்பொழுது மாற்றிக் கொண்டே உள்ளனரா என்பதை அறியவேண்டும். இது அவர்களின் நிலையான பொருளாதார தன்மையை குறிக்கும்.



- சேமிப்பு, சொத்து பற்றிய விவரங்கள் அவர்களுடைய நிதி நிலைமையை காண்பிக்கும். இதன் மூலம் அவர்களால் குழந்தையின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஆதாரம் பெற்றுள்ளனரா என்று கணிக்க முடியும்.

  இந்த பகுதியில் அனைத்து விவரங்களும் தெளிவாக தக்க சான்றுடன் பெறும் பொழுது அவர்களுடைய நிதி ஆதாரம் குறித்த பின்புலம் தெளிவாக்கப்படும். இது ஒரு முக்கியமான அடிப்படை கருத்து ஆகும்.

### ஆ. குடும்ப உறவு முறை:



தாய் தந்தை இருவரும் சேர்ந்து அல்லது ஒரு பெற்றோர் மட்டுமே விண்ணப்பித்து உள்ளாரா என்று ஆராய வேண்டும். பெற்றோர் இருவரும் இணைந்து விண்ணப்பித்திருந்தால் இருவரும் திவீர ஆர்வம் கொண்டு உள்ளனர் என்று அறியலாம். கணவன் அல்லது மனைவி மட்டுமே ஆர்வம் செலுத்துகிறாரா என்று ஆராய வேண்டும். இது சிறிது சிந்திக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்குகிறது. அவர்கள் உறவின் தன்மை, மற்ற உறவினர்களோடு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உறவு பாலங்கள் போன்ற பின்னணி விவரங்கள் அவசியத் தேவையாகும்.

அவர்கள் ஒரு குழந்தையை ஏற்றுக் கொள்ளும்பொழுது அதற்கு அவர்களின் மற்ற குடும்ப உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். மற்ற குடும்ப உறுப்பினர்கள் இம்முயற்சிக்கு தீவிர எதிர்ப்பை காண்பிக்கும்பொழுது அவர்களால் குழந்தையை சரிவர பராமரிக்க இயலாது. மேலும் குடும்ப உறவினர்கள் குழந்தையிடம் பாரபட்சமாக நடந்து கொள்ளலாம். எனவே இது குறித்து தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## இ. பெற்றோரின் ஆரோக்கியம்:

பெற்றோரின் ஆரோக்கியம் ஒரு முக்கியமான பகுதியாகும். உடல்நலம் மற்றும் மனநலம் இரண்டுமே கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏதேனும் நோய் உள்ளதா அதற்கு தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு உள்ளனரா என்பதை தகுந்த சான்றிதழ்களுடன் அறிக்கையில் இணைக்கப்பட வேண்டும். பெற்றோர் யாருக்கெனும் புகைபிடித்தல், மது அருந்துதல், வேறு போதை மருந்து எடுத்துக் கொள்ளும் பழக்கம் இருக்கிறதா என்பதை கவனித்தல் முக்கியமானது மற்றும் அவசியமானதும் ஆகும். ஏனெனில் இந்த பழக்கம் குழந்தையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, பெற்றோரின் நிலைமையை குறித்து தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.



## (ஈ) சமூக அக்கறை குறித்த விவரங்கள்:

பெற்றோர்கள் சமுதாயத்தில் எத்தகைய உறவுகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர், நண்பர்கள் கூட்டம் எவ்வாறு இருக்கின்றது, ஏதாவது பிரச்சனையில் ஈடுபட்டுள்ளனரா, சாதி, மதம், இனம், மொழி குறித்து அவர்களின் பங்களிப்பு என்ன, என்ற விவரங்கள் அத்தியவசியமாக தேவைப்படும். அவர்களுடைய பொழுதுபோக்குகள் என்ன, எத்ததகைய விளையாட்டுகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர், சமுதாய பணிகள் ஏதேனும் மேற்கொண்டு உள்ளனரா, என்பதை சேகரிப்பதால் அவர்களை பற்றிய முழு விவரம் நமக்கு கிடைக்கும். இதை குறித்து அவர்களுக்குத் தெரிந்தவர்களிடம், மற்றும் அலுவலக நண்பர்களிடம் விசாரிக்கலாம். ஏதேனும் வழக்குகளில் மாட்டிக் கொண்டு உள்ளனரா அல்லது காவல்துறைக்கு உதவி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டு உள்ளனரா என்பதை அவசியம் கண்டறிய வேண்டும்.



மாற்று குடும்ப பெற்றோர்களின் அறிக்கையை தயார் செய்யும் முன்னர் இவ்வனைத்து செயல்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் அவர்கள் குறித்து தனி நபர்களால் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளையும் இணைக்க வேண்டும். குறைந்தபட்சம் இரண்டு பரிந்துரைகளாவது அவர்களால் சமர்பிக்கப்பட வேண்டும். தேவை ஏற்படும்பொழுது பரிந்துரை செய்த நபர்களோடு நேரிடையாகவோ, தொலைபேசி வாயிலாகவோ, சமூக அலுவலர்கள் தொடர்புக் கொள்ளலாம்.

சமூக நல அலுவலரின் அறிக்கையோடு மற்றும் ஒரு தன்னிலை மதிப்பீடு அறிக்கை (Self Assessment) பெற வேண்டும். அதற்கு உண்டான படிவங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன.

கற்க கசடற:

- இந்திய இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ன் பிரிவு 44 - பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை குழந்தை நல குழுவின் மூலம் தகுதி வாய்ந்ததாக கருதப்படும் ஒரு குடும்பத்தில் இணைக்க முடியும்.

- பெற்றோர்களை தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களது பின்னிணைப்பு சான்றிதழ் மற்றும் பின்வரும் விவரங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.
    - இத்திட்டத்தில் இணைவதற்கான விருப்பத்தை அறிதல்
    - குடும்ப உறவு முறை
    - பெற்றோரின் ஆரோக்கியம்
    - வேலை மற்றும் நிதி நிலை சார்ந்த விவரங்கள்
    - சமூகம் சார்ந்த விவரங்கள்
    - பரிந்துரைகள்

- தொடர்ந்து பார்வையிட்டு குழந்தை அவர்களைக் குறித்து என்ன கருத்து கூறுகின்றது என்று கவனமாக கேட்டறிதல் வேண்டும். இதன் மூலம் குழந்தையின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அவர்களிடையே உள்ள தொடர்பு ஆகியவற்றை அறியலாம்.

- மாற்று குடும்பத்தில் ஏற்கனவே குழந்தைகள் இருப்பின் அந்த குழந்தைகளின் கருத்தையும் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

## 7.2. குழந்தையின் தேவைகளை ஆராய்ந்து குழந்தையை தேர்ந்தெடுத்தல்:

குழந்தைகளை தேர்ந்தெடுக்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் இருத்தல் வேண்டும். அனைத்து குழந்தைகளும் தம்மிடம் யாரேனும் அன்பு செலுத்த மாட்டார்களா என்று எதிர்பார்க்கின்றனர். குழந்தையின் தேவை இரண்டு விதமாக உள்ளது.




1. உடல்ரீதியான தேவைகள்: குழந்தைக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை குறிக்கும். மாற்று குடும்ப முறையில் செல்வதற்காக தோந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் கூடுமான வரை ஆரோக்கியம் நிறைந்தவர்களாக இருத்தல் அவசியம். ஒல்லியான தோற்றம் தடையன்று. ஆனால் அடிக்கடி நோய்வாய்ப்படக்கூடிய குழந்தையாக இல்லாமல் இருத்தல் நலம்.

குழந்தைகள் இல்லங்களிலிருந்து மற்ற குடும்பங்களுக்கு செல்லும்பொழுது உணவு, உடை, இருப்பிடம், அனைத்திலுமே மாறுதல்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தின் உணவு முறை வேறாக இருக்கலாம். அந்த




உணவு குழந்தைகளுக்கு பிடிக்காமல் இருக்கலாம். அதுபோன்று குழந்தைகளுக்கு பிரியமான உணவு பொருட்கள் குடும்பத்தால் ஒதுக்கப்பட்டவையாக இருக்கலாம். ஆகவே குழந்தையை மாற்று குடும்பத்திற்கு அனுப்பும்பொழுது குழந்தைக்கும் பெற்றோருக்கும் இதை குறித்து அவசியம் தெளிவுபடுத்த வேண்டும். குழந்தைக்கு பிரியமான உணவு பொருள் பட்டியலை பெற்றோரிடம் வழங்குவது சிறந்ததாகும்.

பெற்றோருடன் குழந்தையை அனுப்பும்பொழுது குழந்தையின் உணவு பட்டியல், மருந்துகள், மருத்துவ சான்றிதழ்கள், பள்ளி சான்றிதழ்கள் போன்றவற்றை கொடுத்து அனுப்ப வேண்டும்.

2. மனரீதியான தேவைகள்: குழந்தைகள் இயல்பாகவே அன்பிற்கு ஏங்குபவர்களாக இருக்கின்றனர். எனவே குழந்தையிடம் அன்பு காட்ட தயாராக உள்ள பெற்றோர்களை தேர்ந்து எடுக்க வேண்டும். இருப்பினும் இது குறித்து நடைமுறையில் பல பிரச்சனைகள் நிகழலாம்.



ஒரு இல்லத்தில் அதிக குழந்தைகளுடன் இருந்து பழக்கமான குழந்தைக்கு, குழந்தைகள் இல்லாத மாற்று குடும்பத்தில் இருப்பது ஒரு விதமான வெறுமையை உண்டாக்கலாம். அவர்களுடைய பேச்சில் பயன்படுத்தும் சொற்கள், மாற்று குடும்ப பெற்றோர்களுக்கு புரியாமல் இருக்கலாம். அதேபோல் பெற்றோர்கள் கூறும் சிறிய உத்தரவுகள் கூட குழந்தைகளுக்கு புரியமால் போகலாம். எனவே இது குறித்து குழந்தையை பெற்றோருடன் இணைக்கும் முன்னரே தெரியப்படுத்த வேண்டும்.

குழந்தையின் பழக்க வழக்கங்கள், குழந்தையின் மன நிலையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்கள், கோபத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர், அதிகம் பேசக் கூடியவரா அல்லது அமைதியாக இருப்பவரா, எதைக் கண்டு பயப்படுகிறார்கள், அவர்களுடைய பெற்றோர்களுடன் அவர்களுக்கு இருக்கும் தொடர்பின் தன்மை போன்ற எல்லா விவரங்களையும் கூர்மையாக கவனித்து குழந்தைப் பற்றிய அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

### கற்க கசடற:

- குழந்தையின் தேவை - உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தேவை ஆகும்
- குழந்தையை பெற்றோருடன் அனுப்பும்பொழுது குழந்தைக்கு பிடித்த உணவு பட்டியல், மருந்துகள், மருத்துவ மற்றும் பள்ளி சான்றிதழ்கள் போன்றவற்றை கொடுத்து அனுப்ப வேண்டும்.
- குழந்தையின் பழக்க வழக்கங்கள், மன நிலை, கோபம், பேசும் திறன், எதைக் கண்டு பயப்படுகிறார் மற்றும் பெற்றோருடன் இருக்கும் தொடர்பு போன்ற எல்லா விவரங்களையும் அறிக்கையில் குறிப்பிட வேண்டும். இவை அனைத்தும் குழந்தையை பராமரிப்பதற்கு மாற்று குடும்ப பெற்றோருக்கு ஏதுவாக இருக்கும்.

### 7.2.2. மாற்று குடும்ப முறையில் இணைவதற்கான குழந்தைகளின் தகுதிகள்:

#### அ. தத்து கொடுக்கும் முறையில் இணையக்கூடிய குழந்தைகள்:

குழந்தைகள் சட்டரீதியாக தத்துக் கொடுக்கலாம் என்று குழந்தை நல குழுவினால் அறிவித்த பின்னரே தத்துக் கொடுக்கப்படும். இவர்களை மாற்று குடும்ப முறையில் அனுப்ப இயலாது. தத்து எடுக்க விரும்பும் பெற்றோர்களிடமே அனுப்ப இயலும்.

- பிறந்தது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகள்
- 6 வயதிலிருந்து 8 வயது வரை உள்ள குழந்தைகள்

#### ஆ. மாற்று குடும்ப முறையில் இணையக்கூடிய குழந்தைகள்

- 8 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தத்து குடும்பங்களில் தத்து கொடுக்கப்படலாம் என்று குழந்தை நல குழுவினால் அறிவிக்கப்பட்ட பின்னரும், ஒரு வருட காலமாக தத்து கொடுக்கப்படாமல் இல்லங்களிலே இருக்கும் குழந்தைகள்.
- குழந்தை நல குழுவால் தத்து கொடுக்கலாம் என்று கூறிய பின்னரும், சட்டரீதியான தடங்கல் எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்ட பின்னரும், தத்து குடும்பங்களுக்கு செல்லாமல் இல்லங்களிலேயே இருக்கக் கூடிய ஊனமுற்ற அல்லது சிறப்பு தேவைகள் வேண்டிய குழந்தைகள்.
- 6 வயது முதல் 18 வயது வரை குழந்தை நல இல்லங்களில் வளர்ந்து வரும் குழந்தைகள்.
- மிகவும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் உள்ள பெற்றோரின் குழந்தைகள் அல்லது அவர்களை சார்ந்தவர்கள் எவரும் அவர்களுடைய குழந்தைகளை பொறுப்பேற்று பார்த்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ள குழந்தைகள்.
- மனநலம் பாதிக்கப்பட்டு அதனால் குழந்தைகளை பராமரிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளவர்களின் குழந்தைகள்.
- தாய் அல்லது தந்தை அல்லது இருவருமே நீண்ட காலம் சிறைவாசம் அனுபவிப்பவர்களாக உள்ளவர்களின் குழந்தைகள்.
- உடல்/மனம் மற்றும் பாலியல்ரீதியான கொடுமைகளுக்கு உள்ளான குழந்தைகள் அல்லது பேரிடர்களின் மூலம் பெற்றோரின் பராமரிப்பிலிருந்து பிரிந்து போன குழந்தைகள்.
- மேலும் விவசாயம் பொய்த்ததன் காரணமாக இடம் பெயர்ந்தவர்களின் (Migration) குழந்தைகள்.
- பல விதமான கொடும் செயல்களின் மூலமாக சிதறுண்ட குடும்பங்களில் உள்ள பெற்றோரின் குழந்தைகள்.

இத்தகைய சூழல்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சமுதாயத்தில் காணப்படலாம் அல்லது குழந்தைகளின் இல்லங்களில் சேர்த்து விடப்பட்டிருக்கலாம்.

குழந்தைகள் குடும்பங்களில் தகுதி வாய்ந்த நபர்களின் அன்புடன்கூடிய பராமரிப்பில் வளர வேண்டும் என்பதே மாற்று குடும்ப முறையின் அடிப்படை கருத்து ஆகும். எனவே குழந்தைகள் எந்த வயதினராய் இருந்தாலும் எந்த பாலினத்தவராய் இருந்தாலும் அவர்களை மாற்று குடும்பங்களில் இணைக்க இயலும்.




இந்த மூன்று கேள்விகளுக்கும் ஆம் என்ற பதில் வரும்பொழுது இந்த மாற்று குடும்ப முறை ஒரு சிறந்த முறையாக இருக்கின்றது. இதில் ஏதேனும் ஒன்று சரிவர செயல்படவில்லை என்றாலும் அல்லது ஏதேனும் ஒன்றை குறித்து தகுந்த கவனம் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றாலும் மாற்று குடும்ப முறை பிரச்சனைக்குரியதாக மாறுகின்றது.

கற்க கசடற:

- மாற்று குடும்ப முறைக்கு தகுதியான குழந்தைகள்
  - வயது வரம்பு: 6 முதல் 18 வயது வரை
  - அனாதையான மற்றும் ஆதரவற்ற குழந்தைகள்
  - நோய்வாய்பட்ட பெற்றோருடைய குழந்தைகள்
  - மன நலம் பாதிதக்கப்பட்ட பெற்றோருடைய குழந்தைகள்
  - பல காரணங்களால் இடம் பெயர்ந்த குழந்தைகள்
  - குழந்தை நல இல்லங்களில் உள்ள குழந்தைகள்
  - சிறைவாசம் கொண்ட பெற்றோர்களின் குழந்தைகள்
  - பல கொடுமைகளுக்குள்ளான குழந்தைகள்
- சிறந்த மாற்று குடும்ப முறைக்கான முக்கியமான மூன்று பரிமாணங்கள்:-
  - குழந்தையின் சீரிய நலன் பாதுகாக்கப்படுதல்
  - குழந்தையின் விருப்பத்திற்கு இணங்க குடும்பத்தை தேர்ந்தெடுத்தல்
  - குழந்தையின் தேவைகளை அறிந்து அதை முன்னிறுத்தி செயல்பட கூடியவர்கள்

## 7.3 தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுடன் குழந்தைகளை இணைத்தல்

குழந்தை நல குழுவால், மாற்று குடும்பங்களின் பெற்றோர்களை தகுந்த அறிக்கைகளின் மூலம் குழந்தைகளை பேணிபராமரிப்பதற்கு ஏற்றவர்கள் என்று உறுதி செய்துக் கொண்ட பின்னரே குழந்தையை அனுப்புவது அடுத்த நிலை ஆகும்.

### 7.3.1 மாற்று குடும்பங்களில் குழந்தைகளை இணைப்பதற்கான சட்டமும், விதிகளும்:

#### (அ) இளைஞர் நீதிச்சட்டம் மற்றும் மாதிரி விதிகள்:

- இளைஞர் நீதிச்சட்டம் 2015, விதி எண் 23(16)-ன் படி மாற்று குடும்ப பெற்றோர்கள் குழந்தையை கூட்டிக் கொண்டு செல்வதற்கு முன் குழந்தையை பார்த்து கொள்வதற்கான உடன்படிக்கையில் கையொப்பம் இடவேண்டும்.

- விதி 44(4)ன்படி மாற்று குடும்ப முறையில் குழந்தைகளை பராமரிக்க முன்வரும் பெற்றோர்களுக்கு மாதந்தோறும் ஒரு சிறப்பு நிதி ஒதுக்கப்பட வேண்டும். இந்த நிதி ஆதாரம் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மூலமாக நிர்வகிக்கப்பட வேண்டும்.

- விதி எண் 44(5)-ன் படி குழந்தையின் பெற்றோர்கள் உயிரோடு இருப்பார் ஆயின் அவர்கள் மாற்று குடும்பங்களில் வாழும் தங்களின் குழந்தைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் சென்று சந்திக்கலாம். அசாதாரணமான சூழல்களில் இத்தகைய சந்திப்பு குழந்தையின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பின் இச்சந்திப்பினை குறிப்பிட்ட அதிகாரிகள் தடுக்கலாம். மேலும் குழந்தை தன்னுடைய பெற்றோருடன் திரும்ப போகவும் இயலும். இதனை குழந்தை நல குழு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

- விதி எண் 44(6)-ன் படி மாற்று குடும்ப முறையில் குழந்தைகளை ஏற்றுக் கொண்டுள்ள

பெற்றோர்கள் தங்களுடைய குழந்தையை போல இக்குழந்தையையும் போற்றி பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான சத்தான உணவு, ஆரோக்கியம், கல்வி போன்ற அனைத்தும் கிடைக்க உறுதி செய்ய வேண்டும். குழந்தையை ஒட்டு மொத்தமாக மகிழ்ச்சியாகவும், பராமரிப்புடனும் வளர்க்க வேண்டும்.

### (ஆ). மாற்று குடும்ப முறைக்கான மாதிரி விதிகள் 2016:

- இதன் படி மாநில அரசுகள் தங்களுடைய மாநிலங்களில் மாற்று குழந்தை பராமரிப்பு முறைகளை பரவலாக்க மாநில அளவிலும் எல்லா மாவட்ட அளவிலும் ஒரு நிர்வாக குழு அமைக்க வேண்டும் என்று கூறுகின்றது.

- இக்குழு மாற்று குடும்ப முறையில் இணைத்து கொள்வதற்கான குடும்பத்தின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய வேண்டும். 75 நாட்களுக்குள் அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அக்குடும்பத்தில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் ஒரு குழந்தையை இணைக்க வேண்டும்.

- ஒவ்வொரு குடும்பத்திற்கும் குழந்தையின் பராமரிப்பிற்கான தொகை இரண்டாயிரம் வீதம் ஒரு மாதத்திற்கு வழங்குதல். இத்தொகையானது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்தால் மாற்று குடும்ப பெற்றோர்களின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக செலுத்தப்பட வேண்டும். இக்குடும்பங்களை குழந்தை பாதுகாப்பு அலுவலரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

- குழந்தை கொடுக்கப்பட்டவுடன் இக்குடும்பங்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் குழந்தை நல குழுவினரால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.



கற்க கசடற:

- மாற்று குடும்ப பெற்றோர்களின் தகவல்களை உறுதி செய்துகொண்ட பின்னரே குழந்தையை அனுப்புவது அடுத்த நிலையாகும்.
- மாற்று குடும்ப முறையில் குழந்தைகளை பராமரிக்க ஒரு சிறப்பு நிதியை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மூலமாக வழங்கப்படும்.
- குழந்தைக்குத் தேவையான சத்தாண உணவு, ஆரோக்கியம், பாதுகாப்பு, கல்வி போன்ற அனைத்தையும் உறுதி செய்தல்.
- மாற்று குடும்ப பெற்றோர் குழந்தையை அழைத்து செல்வதற்கு முன் அதற்கான உடன்படிக்கையில் அவசியமாக கையெழுத்திட்ட பின்னரே அழைத்து செல்ல வேண்டும்.
- மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவால் 75 நாட்களுக்குள் மாற்று குடும்ப பராமரிப்பின் தகவல்களை உறுதி செய்து குழந்தையை அக்குடும்பத்தில் இணைக்க வேண்டும்.
- மாற்று குடும்பங்களுடன் குழந்தையை இணைத்தவுடன் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் குழந்தை நல குழுவினரால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

## 7.4 மாற்று பெற்றோர்களிடம் அவசியமாக தெரிவிக்கப்பட வேண்டியவை:

1. அவர்களுடன் தொடர்பில் இருக்கக் கூடிய சமூக அலுவலரின் தொலைபேசி / கைப்பேசி எண்ணை அளித்தல்.
2. ஏதேனும் அவசர தேவை ஏற்படின் தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் விலாசம் தொலைபேசி எண் மற்ற விவரங்கள். அலுவலக நேரத்திற்கு பின் யாரை தொடர்பு கொள்ள வேண்டும் என்ற விவரம்.
3. மாற்று குடும்ப பெற்றோர் குழந்தையை குறித்த பின்தொடர் அறிக்கையை எத்தனை நாட்களுக்கு ஒரு முறை அனுப்ப வேண்டும் என்றும், யாரிடம் அனுப்ப வேண்டும் என்ற விவரமும் கொடுக்கப்பட வேண்டும்.
4. குழந்தை பாதுகாப்பு கொள்கையை ஒரு அறிக்கையாக (குழந்தையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும். கொடுமைகளிலிருந்து எவ்வாறு காக்கப்பட வேண்டும் போன்ற விவரங்கள்) எழுதி மாற்று குடும்ப பெற்றோரும் அரசு அலுவலரும் இணைந்து கையொப்பம் இடவேண்டும்.



5. குழந்தையை குறித்த ஏதேனும் தகவல் சொல்ல வேண்டும் என்றால் யாரிடம் சொல்ல வேண்டும் என்ற விவரத்தை அளிக்க வேண்டும்.

6. குழந்தை பாதுகாப்பிற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய எந்த நிகழ்வு நடந்தாலும் அதை குறித்த தகவல்களை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்ந்த குழந்தை பாதுகாப்பு அலுவலரிடம் அவசியம் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறுதல்.

*உதாரணம்: குழந்தைக்கு விபத்து ஏற்பட்டால் (அ) காயங்கள் ஏற்பட்டால் (அ) ஆரோக்கியத்திற்கு கேடு ஏற்பட்டால் (அ) குழந்தை காணாமல் போய்விட்டால் (அ) தன்னைதானே காயப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தல் போன்றவை*

7. குழந்தையை ஏற்றுக்கொண்ட பின் பெற்றோர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் பயிற்சிகள் குறித்த தகவல்களை அவர்களுக்கு முன்னரே தெரியப்படுத்தபட வேண்டும்.

8. பயிற்சியில் இதுபோன்று குழந்தைகளைக் கூட்டி சென்றுள்ள மாற்று பெற்றோர்களின் விவரம், தொலைபேசி எண், போன்றவற்றை தெரிவிப்பதுடன் அனுபவங்களையும் பகிர்ந்துக்கொள்ளலாம்.

9. வீட்டிற்கு குழந்தையை அழைத்த வந்த முதல் நாள் வித்தியசமான அனுபவம் ஏற்படலாம் என்பதை அறிவுறுத்த வேண்டும். மாற்று குடும்ப பெற்றோர்கள் எல்லா விதமான அனுபவங்களுக்கும் தங்களை தயார் செய்து கொள்ளுதல் அவசியம் என்பதை உணர்த்தவேண்டும். ஏனெனில் சில சமயம் குழந்தை தங்களுடைய நண்பர்களையும் இல்லத்தில் தன்னை கவனித்துக் கொண்டிருந்த இல்ல காப்பாளர்களையும் நினைத்து கவலை அடையளாம். இதனால் பெற்றோரிடம் பேசமாலோ (அ) சோகமாகவோ (அ) சோர்வுடனோ காணப்படலாம்.

## 7.5 மேற்பார்வை மற்றும் தொடர்கண்காணிப்பு:

1. மேற்பார்வை செய்தல் மிக முக்கியமான பணியாகும். மேற்பார்வை செய்யும்பொழுது உறுதி செய்துக்கொள்ளக்கூடிய செயல்கள்:-

- குழந்தை, மாற்று பெற்றோர் ஆகிய இருதரப்பினரும் இந்த இணைப்பை எவ்வாறு புரிந்து கொண்டு உள்ளனர்.
- மாற்று குடும்ப வாழ்வில் நடைப்பெற்ற மாற்றம்
- மாற்று குடும்பத்தில் இணைக்கப்பட்ட குழந்தையின் நல்வாழ்க்கை



இதற்கான படிவங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம், எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை குடும்பங்களை சென்று பார்க்க வேண்டும் என்ற கால வரையறையை நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

2. தொடர் கண்காணித்தல் என்பதும் மேற்பார்வையே. இருப்பினும் இது குழந்தையை அக்குடும்பத்தில் எவ்வளவு நாட்கள் வரை பராமரிக்கப்பட வேண்டும் என்று குழந்தை நல குழுவினால் விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த காலம் முடியும் வரை, குழந்தையைத் தொடர்ந்து கண்காணித்தலைக் குறிக்கும்.

மாற்று பெற்றோருக்கும் இந்த குடும்பத்தில் இணைக்கப்பட்டுள்ள குழந்தைக்கும் ஒரு நல்ல நண்பனாக, நம்பிக்கை கொண்டவர்களாக, பாதுகாப்பு அலுவலர் விளங்க வேண்டும். இந்த பருவத்தில் குழந்தை குறித்த அறிக்கைகள் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்திலும், குழந்தை நல குழுவிலும் கொடுக்கப்பட வேண்டும்.

## 7.6 பிரச்சனைகளை சந்தித்தல்:

பல முயற்சிகளுக்கு பிறகு குழந்தை நல குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மாற்று பெற்றோர்களும் அக்குடும்பத்தில் இணைக்கப்பட்ட குழந்தைக்கும் இடையில் சில சமயம் நல்ல உறவு ஏற்படுவது இல்லை. இந்த மாதிரியான சூழ்நிலையில் உடனடியாக குழந்தை பாதுகாப்பு அலுவலர் தலையிட்டு குழந்தைக்கு எது நன்மையோ அந்த நடவடிக்கையை மேற்கொள்வது மிக அவசியம் ஆகும்.

குழந்தைகள் குறித்து மாற்று குடும்ப பெற்றோர் அளிக்கக்கூடிய புகார்கள்:

1. குழந்தை கீழ்ப்படிய மறுக்கின்றது. எதை கூறினாலும் சண்டையில் முடிகின்றது. குழந்தையுடன் சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை.
2. குழந்தை பள்ளிக்கு செல்ல மறுக்கின்றது அல்லது படிக்கவோ, படிப்பு சம்பந்தமான பிற விஷயங்களை விரும்பாமல் இருத்தல்.
3. குழந்தை தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்வது; அல்லது அதிகமாக கோபப்படுவது; இதுபோன்ற நிலைமையை தங்களால் கட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை.
4. குழந்தை பெற்றோர்களிடம் அன்பாக இல்லை போன்றவை

அதே போல் குழந்தைகளும் பெற்றோர் குறித்து அளிக்கக்கூடிய புகார்கள்:

1. மிகுந்த கட்டுப்பாடு கொண்ட நடவடிக்கைகள் குடும்பத்தில் உள்ளது. எதையும் சுதந்திரமாக செய்ய முடியவில்லை.
2. குடும்பத்தில் அளிக்கப்படும் உணவு தனக்கு ஏற்றதாக இல்லை.
3. பெற்றோர்களும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் தன்னை வேறுபடுத்தி பார்க்கிறார்கள்.
4. தொலைக்காட்சி பார்க்க அனுமதி மறுக்கிறார்கள் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் தூங்க செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.
5. தன்னை வேலை வாங்குகிறார்கள்
6. தன்னிடம் இயல்பாக பழகுவதில்லை.

இவ்வாறான புகார்கள் வரும் நிலையில், இரு தரப்பினருக்கும் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் வழங்கப்பட வேண்டும். ஆனால் குற்றச்சாட்டுகள் குழந்தையின் நன்மையை பாதிக்க கூடிய வகையில் இருந்தால் இதை குறித்து குழந்தை நல குழுவினரிடமும், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரிடமும் தெரியப்படுத்த வேண்டும். பின்னர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சில சமயம் மாற்று பெற்றோர்கள் குழந்தையை மறுதலித்து மறுபடியும் இல்லங்களுக்கு கொண்டு வந்துவிட்டுவிடுகிறார்கள். இது ஒரு துயரமான சம்பவம் ஆகும். இது குழந்தைக்கு மன சோர்வை அளிக்கலாம். தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளின் மூலமாகவும், பயிற்சிகள் மூலமாகவும் இந்நிகழ்வை தவிர்க்கலாம்.

கற்க கசடற:

- மாற்று குடும்ப பெற்றோர் மற்றும் குழந்தையை மேற்பார்வை செய்வதுடன் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அதற்கான படிவம் மற்றும் கால இடைவெளியை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.
- மேற்பார்வை செய்த அறிக்கையை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகம் மற்றும் குழந்தை நல குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- மேற்பார்வையிடுவோர் மாற்று குடும்ப பெற்றோருக்கும் குழந்தைக்கும் நம்பிக்கைகொண்ட சிறந்த நபராக இருக்க வேண்டும்.
- குழந்தை குறித்து அல்லது மாற்று குடும்ப பெற்றோர் குறித்து பிரச்சனை வரும்பொழுது அவர்களுக்கு ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் வழங்க வேண்டும்.
- தகுந்த பயிற்சி மற்றும் தக்க நடவடிக்கைகளின் மூலமாக பிரச்சனைகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்வது சிறந்தது ஆகும்.



# மாற்று குடும்ப முறையில் பங்கேற்கும் அலுவலர்களும் அவர்களுடைய பொறுப்புகளும்

## அத்தியாயம் - 8

# மாற்று குடும்ப முறையில் பங்கேற்கும் அலுவலர்களும் அவர்களுடைய பொறுப்புகளும்

## 8.1 மாற்று குடும்ப முறையில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள்:

1. குழந்தை நலக் குழு
2. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு
3. மாவட்ட குழந்தை நல பாதுகாப்பு அலுவலர்
4. நிறுவனம் சாரா குழந்தை பாதுகாப்பு அலுவலர்
5. நிறுவனம் சார்ந்த குழந்தை பாதுகாப்பு அலுவலர்
6. தன்னார்வ தொண்டு நிறுவனம்

### 8.1.1 குழந்தை நல குழு (CWC-Child Welfare Committee):



இத்திட்டத்தின் கீழ் குழந்தை நல குழுவிற்கு முக்கியமான பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாற்று பராமரிப்பு முறை குடும்பங்களில் குழந்தைகளை இணைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் குழந்தை நல குழு முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழு மாற்று குடும்ப முறை மக்கள் மனதில் ஆழமாக சென்றடைவதற்கு தனியாகவும் பிற நிறுவனங்களுடன் சேர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

### 8.1.2 குழந்தை நல குழுவின் பணிகள்

1. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் குழந்தைகள் குறித்த அறிக்கைகளையும், குடும்பங்கள் குறித்த அறிக்கைகளையும் மேற்கொள்ள உத்தரவு அளித்தல். இதுவே இந்த முயற்சியின் முதல் கட்டம் ஆகும். மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் குழந்தைகளை அவர்களுடைய பொறுப்பில் உள்ள பிற சமூக நல பணியாளர் (Social Worker) அல்லது ஆற்றுப்படுத்தும் ஆலோசகர்



(Counsellor) மூலமாக இப்பணியை மேற்கொண்டு அறிக்கையை குழந்தை நல குழுவிடம் சமர்பிக்க வேண்டும்.

2. குழந்தை மற்றும் குடும்பத்தை பற்றிய அறிக்கைகளை சமர்ப்பித்த பின்னர், இவ்வறிக்கைகளின் அடிப்படையில் குழந்தைக்கு ஏற்ற மாற்று குடும்பத்தை தேர்ந்தெடுத்து முடிவு செய்தல்.

3. குழந்தையின் தனிப்பட்ட (Individual Care Plan) அறிக்கையை ஆராய வேண்டும். தேவை இருப்பின் மாற்று குடும்பத்தில் குழந்தையை இணைக்க குழந்தையின் பெற்றோரிடம் ஒப்புதல் பெறுதல்.

4. புரிந்து கொள்ளக்கூடிய வயதில் குழந்தை இருப்பின் குழந்தையிடம் மாற்று குடும்ப முறை பற்றி கூறி குழந்தையின் கருத்தை தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல் அக்குழந்தையின் ஒப்புதலை பெறுதல்.

5. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் அறிக்கையின் அடிப்படையில் குழந்தையை குறிப்பிட்ட மாற்று குடும்பத்தில் இணைப்பதற்குரிய அனைத்து தரவுகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதி செய்தல்.

6. குழந்தையை மாற்று குடும்பத்தில் இணைத்தபின் குழந்தையை மேற்பார்வை செய்த (முதல் 3 மாதங்களுக்கு ஒருமுறை பின்பு 6 மாதங்களுக்கு ஒரு முறை) அறிக்கைகளை பரிசீலனை செய்தல்.

7. தேவைப்படின் குழந்தை அக்குடும்பத்திலேயே தங்கியிருப்பதற்கான ஆணையினை வழங்குதல் அல்லது சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் ஆணையை ரத்து செய்தல்

8. தேவையான ஆணையை வழங்க வேண்டியதும் குழந்தை நல குழுவின் முக்கிய பணி ஆகும்.

## 8.2. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் (District Child Protection Officer-DCPO)

1. மாற்று குடும்ப முறையை நடைமுறைப்படுத்துவது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரின் தலையாய பணியாகும். இது குறித்த எல்லா நிலைகளிலும் இவரே பொறுப்பு அதிகாரி ஆகிறார்.

2. மாற்று குடும்ப முறை தேவை என்று அணுகும் அனைத்து குழந்தைகளுக்கும் மாற்று குடும்ப முறை தேர்வு செய்வது முக்கிய பணியாகும்.

3. குழந்தைகள் குறித்த மேற்பார்வை அறிக்கைகள் ஒழுங்கான கால முறைகளில் வரச் செய்வதே இவர்களது கடமையாகும்.

4. குழந்தையின் பெற்றோர்களுக்கு தேவைப்படும் பொழுதெல்லாம் சொந்த ஆலோசனை வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலை மேற்கொள்ள வேண்டும்.

5. மாற்று குடும்ப முறையின் பொறுப்புகள் மற்றும் குழந்தைக்கு கிடைக்கக்கூடிய பலன்கள் குறித்து குழந்தையின் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலை மேற்கொள்ளுதல்.

6. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் மாற்று குடும்ப திட்டத்தை குறித்து காலாண்டு அறிக்கையை மாற்று குடும்ப ஒப்புதல் குழுவிற்கும் (SFCAC- Sponsorship & Foster Care Approval Committee), வருடாந்திர அறிக்கையை மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

## 8.3 மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு:- (District Child Protection Unit - DCPU)

1. மாவட்டத்தில் மாற்று குடும்ப முறையை சார்ந்த திட்டத்தில் பங்கேற்கவும் செயல்படுத்தவும் விருப்பம் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும், சமூக நல ஆர்வலர்களையும் கண்டெடுத்து தயார் செய்தல்.

2. இத்திட்டத்தில் செயலாற்றக்கூடிய அனைத்து தரப்பு நிறுவனங்களுக்கும் தகுந்த இடைவெளியில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். பயிற்சிகள் அளிப்பதன் மூலம் அதன் செயலாக்கத் திறனை மேம்படுத்துதல்

3. குழந்தை பராமரிப்பு இல்லங்கள், தத்து கொடுக்கும் இல்லங்கள் அனைத்தையும் முறையான கால அளவில் கண்காணித்து பராமரித்தல்.

4. மாற்று குடும்ப திட்டத்தின் கீழ் அல்லது பயன்பெற்று வரும் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் குறித்த தகவல் தரவுகள் ஏற்படுத்துதல்.

5. குழந்தைக்கு 18 வயது முடிந்த பின்பு இத்திட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட குழந்தையின் வங்கி கணக்கை முழுவதுமாக மாற்றியமைக்க முடிவு செய்தல்.

6. குறிப்பிட்ட கால அளவில் குடும்பங்களைத் தொடர்பு கொள்வதுடன் அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஒரு வழிகாட்டியாக இருத்தல்.

7. மாற்று குடும்பம் முறையின் கீழ் பயன்பெறுவோரின் காலக்கெடு நியமிக்க பட வேண்டும் அல்லது துண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் அதற்கான அறிக்கைகளை தயார் செய்து குழந்தை நல குழுவிடம் சமர்பிக்கப்படுதல்.

8. ஆதார் இணையத்தில் மாற்று குடும்ப பெற்றோர் மற்றும் தங்கள் குழந்தையையும் பதிவு செய்துள்ளனர் என்பதை உறுதி செய்தல் மற்றும் அதற்கான முயற்சிகளில் அவர்களுக்கு உதவி புரிதல்.

9. மக்கள் தகவல் தொடர்பு சாதனம் மூலம் மாற்று குடும்ப முறையானது மக்களிடையே சென்றடைந்து, அதை செயல்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்பாடு செய்தல்.

10. இத்திட்டம் சீரான முறையில் செயல்படுகிறதா என்பதை கண்காணித்து மதிப்பீடு செய்வது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் முக்கிய கடமையாகும்.

## 8.4 நிறுவனம் சாரா குழந்தை பாதுகாப்பு அலுவலர் (Protection Officer-Non Institutional Care)

- மாற்று குடும்ப முறையில் இணைப்பதற்கான குழந்தைகளைத் தேர்வு செய்தல்
- அது போலவே குழந்தைகளை ஏற்றுக் கொள்ள முன்வரும் தகுதியான பெற்றோரை குறித்த குடும்ப ஆய்வு அறிக்கையைத் தயார் செய்தல்.

- தகுதி வாய்ந்த மாற்று குடும்பத்தோடு குழந்தைகளைக் இணைத்தல்.
- குழந்தையின் பெற்றோர் உயிருடன் இருந்தாலோ அல்லது சிறையில் இருந்தாலோ மாற்று குடும்பத்தில் குழந்தை இணைவதற்கு அவர்களுடைய ஒப்புதலை பெற்றுக் கொள்ளுதல்.
- அது போலவே நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள பெற்றோராக இருப்பின் அவர்களுடைய ஒப்புதலை பெறுதல்.
- மாற்று குடும்ப முறையில் இணைப்பதன் மூலம் பயன்பெறக் கூடிய குழந்தைகளை இனங்கண்டு அவர்களை பட்டியலிடுதல். (குழந்தை இல்லங்கள் மற்றும் அருகில் உள்ள சமூகத்தில் பாதுகாப்பற்ற சூழலில் உள்ள குழந்தைகள்)
- நிதி ஆதாரம் தேவைப்படும் குழந்தைகளை பட்டியலிட்டு மாற்று குடும்ப ஒப்புதல் குழுவிடம் (SFCAC - Sponsorship & Foster Care Approval Committee) அளித்தல்.
- தேவை ஏற்படின் குழந்தைகளுக்கும், மாற்று பெற்றோருக்கும் உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்.
- குழந்தைக்கு 18 வயதாகும் வரை அல்லது இடைப்பட்ட காலத்தில் குழந்தைகள் மாற்றுக் குடும்பங்களில் இருக்கும்பொழுது அவர்களின் நலனை கண்காணித்தல் மற்றும் அது குறித்த தேவைப்பட்ட அறிக்கைகளை தயார் செய்தல்.
- குழந்தை தன்னுடைய உண்மையான பெற்றோரிடம் கொண்டுள்ள உறவை பாதுகாத்தல்.
- மாதந்தோறும் மாற்று குடும்பங்களில் வாழும் குழந்தைகளை நேரில் சந்தித்தல்.
- பெற்றோருக்கான பயிற்சி மற்றும் கருத்தரங்கு போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.
- குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற பொதுவான பயிற்சிகளை ஏற்பாடு செய்து, அதன் மூலம் குழந்தைகளின் வளர்ச்சியினை கண்காணித்தல்

## 8.5 நிறுவனங்கள் சார்ந்த குழந்தை பாதுகாப்பு அலுவலரின் பணிகள் (Protection Officer - Institutional Care):

- அரசிடம் பதிவு செய்யப்பட்ட அனைத்து குழந்தை இல்லங்களிலும் 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இருக்கிறார்களா என்றும் அவர்களில் எத்தனை குழந்தைகளுக்கு மாற்று குடும்ப முறையின் மூலம் குடும்பங்களில் வளர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தர முடியும் என்று தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.
- பாதுகாப்பு அலுவலர் அருகில் உள்ள மற்ற குழு அமைப்புடன் இணைந்து குழந்தையின் சீரிய நலனை உறுதி செயதல்
- குழந்தை இல்லங்களிலிருந்து மாற்று குடும்ப முறையில் பயன்பெறும் எண்ணிக்கையை தகுந்த தரவுகளில் சேகரித்து வைத்தல்.
- குழந்தைகள் சம்பந்தமான விவரங்களை இணையத்தில் (Online) சேகரித்து வைத்தல்.

## 8.6 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்: (Non Governmental Organisations - NGOs)

- மாற்று குடும்ப முறை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துவதற்கு முக்கியமான பொறுப்பாளர்களாக இருத்தல்.
- இந்நிறுவனங்கள் அவர்கள் வேலை செய்யும் பகுதிகளில் தகுதி வாய்ந்த பெற்றோர்களை கண்டறிந்து அது குறித்த தகவல்களை குழந்தை பாதுகாப்பு அலகிற்கு தெரிவித்தல்
- குழந்தை மாற்று குடும்பங்களில் இணைவதற்கு உறுதுணையாக இருந்து அதற்கான அனைத்து வேலைகளையும் சரியான முறையில் செய்து முடித்தல்.
- குழந்தையின் தனிப்பட்ட நல அறிக்கை மற்றும் குடும்பம் குறித்த அறிக்கைகளைத் தயாரித்தல்.
- மாற்று குடும்பத்தில் உள்ள பெற்றோர்கள், அதில் இணைந்துள்ள குழந்தைகள், குழந்தைகளுக்கு உரிய பெற்றோர்கள் ஆகிய அனைத்து உறுப்பினர்களுக்கும் தேவைப்படும் நேரத்தில் மனநல ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதலையும் வழங்குதல்.
- மாற்று குடும்பங்களை மேற்கொள்ள இருக்கும் பெற்றோர்களுக்கு குழந்தையை ஏற்பதற்கு முன்னரும் பின்னரும் தொடர்ந்து பயிற்சியினை அளித்தல்.
- மாற்று குடும்ப பெற்றோர்கள் சரியான முறையில் குழந்தையை பராமரிக்கின்றனரா என்பதையும், குழந்தையின் சீரிய நலன் பாதுகாக்கப்படுகிறதா என்பதையும் தொடர் கண்காணிப்பின் மூலம் உறுதி செய்தல்.

### கற்க கசடற:

- மாற்று குடும்ப முறையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் முக்கிய பொறுப்புள்ளவர்கள்
  - குழந்தை நல குழு
  - மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு அலகு
  - மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்
  - நிறுவனம் சாராத குழந்தை பாதுகாப்பு அலுவலா்
  - நிறுவனங்கள் சார்ந்த குழந்தை பாதுகாப்பு அலுவலர்
  - தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்



# எதிர்நோக்கும் சவால்கள்

அத்தியாயம் - 9

# எதிர்நோக்கும் சவால்கள்

## 9.1 சவால்கள்:

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் மாற்று குடும்ப முறையும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயம் செய்தது. இது இயல்பாகவே பல சவால்களை உள்ளடக்கியதாக இருந்தது.

- அரசு அலுவலர்களுக்கு குழந்தைகளிடையே வேலை செய்வது குறித்தும் மாற்று குடும்ப முறை பற்றியும் சரியான புரிதலை ஏற்படுத்தாததால் அவர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.
- அரசு அலுவலர்கள் நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டாலும் தோல்வியையே சந்தித்தார்கள். இதனால் அவர்கள் ஏமாற்றத்தையும், மனச்சோர்வையும் அடைந்தனர்.
- குழந்தைகள் வாழ்வதற்கு ஏற்ற இடம் குடும்பங்களே என்ற கருத்தை முழுமனதுடன் இப்பணியில் ஈடுபட்ட அனைவரால் ஏற்றுக் கொள்ளாமல் இருத்தல்.
- தற்சமயம் இந்த எண்ணம் அரசாங்கத்திலோ, அரசு அலுவலகங்களிடமோ முழுமையாக சென்று அடையவில்லை.
- இம்முறைகளை மேற்கொள்ள தெளிவான விளக்கங்கள் மற்றும் அறிவுசார்ந்த திறன்களின் அடிப்படையில் வேலை செய்யக் கூடிய அலுவலர்கள் தேவை.
- தற்பொழுது இளைஞர் நீதிச் சட்டம் 2015 நடைமுறைக்கு வந்த பின்னர்தான் இந்த இல்லங்களுக்கு அடிப்படை தரநிர்ணயம் தேவை எனவும், அனைத்து இல்லங்களும் அரசாங்கத்திடம் பதிவு செய்ய வேண்டும் என்ற கட்டாயம் உருவாகியுள்ளது. இன்னும் பல குழந்தை இல்லங்கள் மறைமுகமாக பதிவு செய்யாமல் சுயலாபத்திற்காக இயங்கி வருகின்றன.

இத்தகைய பின்னணியில் நம்மை எதிர்நோக்கி இருக்கும் சவால்களை எவ்வாறு சந்திக்க இயலும் என்று இப்பொழுது பார்க்கலாம்.

1. எவ்வாறு குடும்பங்களைக் கண்டுபிடிப்பது என்பது நம்மை எதிர்நோக்கி இருக்கும் முக்கியமான சவால் ஆகும்.

சில தம்பதியர் தங்களுக்கு குழந்தை இல்லை என்ற காரணத்தினால் மட்டுமே குழந்தையை தத்து எடுக்கலாம் என்று நினைக்கின்றார்கள். அவ்வாறு தத்து எடுக்க முடியாத சூழலில் மாற்று பெற்றோர்களாக இருக்க முடிவு செய்கின்றார்கள். குழந்தை நம்மை நேசிக்க வேண்டும் என்ற

கருத்தே பிரதான கருத்தாக இருக்கின்றது. மேலும் குழந்தைகளிடம் அவர்களது எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கின்றது. அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாதபொழுது மனதைரியத்தை இழக்கின்றனர்.

- அலுவலர்கள் மாற்று குடும்ப முறை குறித்து தாங்கள் பணி செய்யும் சமூகத்தினரிடம் பரப்புரை செய்ய வேண்டும்.
- குழந்தைகள் குடும்பங்களில்தான் வளர வேண்டும் என்ற மைய கருத்தையும், குழந்தைகள் மாற்று குடும்ப முறையில் இணைக்கப்படும் பொழுது ஒரு நல்ல சூழலில் வளர ஏதுவாக அமைகின்றது என்பதையும் எடுத்து கூற வேண்டும்.
- குறிப்பாக கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களிடம் பயிற்சிகள் நடத்தும் பொழுது இது குறித்து எடுத்துரைக்க வேண்டும்.
- எல்லா கிராமங்களிலும் ஒருவரோ அல்லது இரண்டு நபரோ மாற்று குடும்ப முறையில் இணைய தயாராக இருப்பார்கள். அத்தகையவர்களின் பெயர்களை பகுதிவாரியாக பட்டியலிட வேண்டும்.
- இந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோருக்கு மாற்று குடும்ப முறை பற்றி குறைந்த பட்சம் இரண்டு பயிற்சிகளாவது அளிக்க வேண்டும்.
- அவர்கள் குழந்தை இல்லங்களில் சென்று பார்க்கவும், அக்குழந்தைகளுடன் நேரம் செலவிடவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- பயிற்சிகள் மூலமாக மாற்று குடும்ப பெற்றோர்களாக இருப்பதற்கு மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களுக்கு முதலில் பரீட்சாத்த முறையில் குறுகிய காலத்திற்குள் (இரண்டு நாட்கள் முதல் ஒரு வாரம் வரை) குழந்தைகளை அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் குழந்தைகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை மேற்பார்வை செய்து, பெற்றோரின் தகுதியை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- பல வழிகளிலும் பெற்றோரின் தகுதியை உறுதி செய்து கொண்ட பின் மாற்று குடும்ப பெற்றோராக முடியும் என குழந்தை நல குழுவால் அங்கீகரிக்கப்படலாம். அவர்களுக்குத் தகுதியான குழந்தைகளை கொடுக்கலாம்.

இவ்வாறு முறையாக பல்வேறு தருணங்களில் பயிற்சி தரப்பட்டு பண்படுத்தப்பட்ட பெற்றோர்களே மாற்று குடும்ப முறைக்கு தகுதி வாய்ந்தவர்களாகின்றனர். இந்த தயாரிப்பு பணியில் மாவட்டத்திலுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களும் முக்கிய பொறுப்பு வகிப்பவர்களாக உள்ளனர்.

2. குழந்தைகள் மாற்று பெற்றோர்களுடன் போவதற்கு விரும்புவதில்லை.

ஆதரவற்ற இல்லங்களில் வாழும் குழந்தைகளிடம் நாம் எதிர்பார்க்க கூடிய ஓர் மன ஓட்டமே இது ஆகும். குழந்தைகளுக்கு எல்லா இல்லங்களிலும் குறைந்தபட்சம் ஒரிரு நண்பர்களாவது இருப்பார்கள். ஏதேனும் ஒரு பணியாளரிடம் மனரீதியான உறவு வளர்த்துக் கொண்டிருக்கலாம். அவர்களைப் பிரிந்து வேறு புதிய இல்லத்திற்கு போவதை, அவர்கள் விரும்புவதில்லை.

மற்ற சூழல்கள் சரியாக இல்லாதபொழுது அதை ஏற்றுக்கொள்வதற்கும், புதிய நபரிடம் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கும் குழந்தைகளுக்கு சுமையாக உள்ளன. சில சமயம் குழந்தைகள் பெற்றோர்களிடம் கசப்பான அனுபவத்தை பெற்றிருந்தால், மறுபடியும் அப்பா என்றோ அம்மா என்றோ யாரையும் அழைக்க விரும்புவதில்லை. அத்தகைய குழந்தைகளுக்கு மாற்று குடும்பங்களில் இணைப்பது கடினமாக இருக்கின்றது. குழந்தைகளுக்கு சிறந்த பாசப்பிணைப்புகள் கிடைக்கும் பட்சத்தில் இச்சூழல்களை மறந்துவிடுகிறார்கள்.

- தகுந்த உளவியல் முறைகளின் மூலம் குழந்தையிடம் குடும்பங்களில் வாழ்வது நன்மையாக இருக்கும் என்று எடுத்துரைக்கப்பட வேண்டும்.
- இதற்கென உளவியல் ரீதியாக தொடர்பு சாதனங்களை ஏற்பாடு செய்துகொள்வது குழந்தை பாதுகாப்பு அலகின் முக்கிய கடமையாகும். பட அட்டை, கதைகள் போன்ற யுக்திகளைக் கையாளுவதன் மூலம் தெரிவிக்கலாம்.
- குழந்தையிடம் எப்பொழுது வேண்டுமானாலும் இல்லத்துக்கு திரும்பி வரலாம், குழந்தை பாதுகாப்பு அலுவலரிடம் தொடர்பு கொண்டு பேசலாம் என்பதை விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.
- மாற்று குடும்ப முறை ஒரு தற்காலிகமான முறையே ஆகும். எனவே மாற்று குடும்பத்தில் ஏதேனும் பிரச்சனை இருக்குமேயானால் எப்போது வேண்டுமானாலும் அவர்கள் அவர்களது இல்லங்களுக்கு திரும்பி வரலாம் என்றும் குழந்தை பாதுகாப்பு அலுவலரிடம் தொடர்பு கொள்ளும் வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற விவரங்களை குழந்தைகளுக்கு நன்றாக விளக்க வேண்டும்.
- குழந்தை எவ்வாறெல்லாம் நினைக்கும் என்ற இயல்பான நிலையை குழந்தை நல அலுவலா் புரிந்து கொள்வது அவசியம்.

3. குழந்தைகள் மாற்று பெற்றோர்களை மதிப்பதில்லை அல்லது பிரச்சனைக்குரியவர்களாக நடந்துகொள்கின்றார்கள்.

குழந்தையின் வயது அவர்களின் பின்னணியின் அடிப்படையில் அவர்கள் எந்தளவிற்கு நன்றாக மாற்று குடும்பங்களில் தங்களை இணைத்துக் கொள்வார்கள் என்று அறிய முடியும். சிறிய வயதுடைய குழந்தைகள் இயல்பாகவே பழக்க வழக்கங்களில் (நடை, உடை, பாவனை போன்ற) ஏற்படும் மாற்றங்களை சுலபமாக ஏற்றுக்கொள்வார்கள்.

- இல்லத்திலேயே அதிக பிரச்சனைக்குரிய குழந்தையாக இல்லாத குழந்தைகளை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- தேர்ந்தெடுத்த குழந்தைகளுக்கு முதலில் பெற்றோருடன் வசிப்பது மகிழ்ச்சியான ஒன்று என்பதை பல விதங்களில் எடுத்து கூறவேண்டும்.
- மாற்று பெற்றோர், வீடு, அவர்களின் நண்பர்கள் போன்றவற்றை புகைப்படங்கள் மூலம் சேகரித்து அந்த புகைப்பட தொகுப்பை குழந்தைகள் மாற்று பெற்றோருடன் போவதற்கு முன்னர் (ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் முன்னதாக) குழந்தைகளிடம் காண்பிட்டு அதைப்பற்றி கூறவேண்டும்.
- குழந்தை பாதுகாப்பு அலுவலர் அல்லது சமூக பணியாளர் அந்த குழந்தையிடம் மாற்று பெற்றோரின் குணநலன்கள் பற்றியும் அவர்களின் எதிர்பார்ப்புகளை பற்றியும் எடுத்து கூறவேண்டும்.

4. மாற்று குடும்ப பெற்றோர்களிடம் வளரிளம் பருவத்தை பற்றிய விழிப்புணர்வு அல்லது சரியான புரிதல் இல்லாத காரணத்தினால் பிரச்சனைகள் உருவாகின்றன.

11 வயது முதல் 18 வயது வரை குழந்தைகள் பருவ மாற்றத்தின் ஆரம்ப நிலையில் இருப்பதால் அவர்களை அறியாமலேயே அவர்களுடைய உடலிலும், மனதிலும் பலவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த நிலையில் பல வருடமாக பழகி வந்த இல்லங்களைத் துறந்து இன்னொரு குடும்பத்தில் இணைவதற்கு அதிக விருப்பம் காட்டுவதில்லை. இத்தகைய சூழலில் மாற்று குடும்பங்களுக்கு சென்றால் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கு இணங்க மாற்றிக் கொள்வது அவர்களுக்கு கடினமாக உள்ளது.

- வளரிளம் பருவத்தில் உள்ள குழந்தைகளை மாற்று பெற்றோரிடம் அனுப்பாமல் இருப்பது ஒருவிதத்தில் சிறந்தது.

- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டால் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இதற்கான பயிற்சி நேரத்தை ஏற்படுத்தி பயிற்சி அளிக்க வேண்டும்.
- முதலில் ஓரிரு நாட்கள் மட்டுமே அனுப்ப வேண்டும். இந்த இடைவெளியில் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்றும், வளரிளம் பருவத்தில் உள்ள ஆண் அல்லது பெண் குழந்தை அந்த வீட்டு சூழலை எவ்வாறு உணர்ந்தார்கள் என்று கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். இருவருக்கும் இடையே ஒப்புதல் ஏற்பட்டால் மட்டுமே மாற்று குடும்ப முறையில் அனுப்ப வேண்டும்.
- குழந்தைளை குடும்பத்தில் இணைத்த பின்னர் முதல் பத்து நாட்கள் தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டும்.
- பெற்றோர் குழந்தை இருவரையும் அவர்களுடைய அனுபவங்களை குறித்து தினந்தோறும் தெளிவாக எழுதவேண்டும் என்று முதலிலேயே கூறவேண்டும். இந்த நாட்குறிப்பு (Journal) மூலம் அவர்களுடைய உறவு எவ்வாறு வளர்ந்து வருகிறது என்று அறியமுடியும். மேலும் பிரச்சனை எப்பொழுது தொடங்கியது என்றும் பிரச்சனையை இருபாலரும் எவ்வாறு கையாண்டார்கள் என்பதையும் சமுக நல ஊழியர் அறிந்து கொள்ள இந்த நாட்குறிப்பு உதவியாக இருக்கும்.
- மாற்று குடும்ப முறையில் வளரும் இப்பருவத்தினருக்கு ஒரு மாத இறுதியில் அவர்களை பாராட்டி சிறு சிறு பரிசுகள் கொடுக்கலாம்.
- குடும்ப நபர்களை வரவழைத்து ஒரு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்யலாம்.
- வளரிளம் பருவத்தில் குழந்தைகள் எதிர்நோக்கக்கூடிய சவால்களையும் அதற்கு எந்த முறையில் தீர்வு காணப்பட இயலும் என்பதை குறித்து பெற்றோருக்கு தெரியப்படுத்த வேண்டும். இதை குறித்த தகவல்கள் அடங்கிய சிறு கைப்புத்தகம் ஒன்றை வடிவமைத்து அவர்களுக்கு கொடுக்கலாம்.

5. மாற்று குடும்ப முறையை ஏற்றுக்கொள்ளும் பெற்றோர்கள் அதிக எதிர்பார்ப்புகள் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

சாதாரணமாகவே பெற்றோர்களின் ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையம் குழந்தைகள் பூர்த்தி செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றனர். அவர்களை போலவே நல்ல மதிப்பீடுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுடைய சமுதாய சூழலுக்கு ஏற்ப நடை உடை பாவனைகளை திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள்.

மாற்று குடும்ப முறையில் இணையும் பெற்றோர்கள் ஓரிரு மாதங்களிலேயே குழந்தைகளை முற்றிலும் மாற்றிவிட முடியும் என நம்புகின்றனர். இது சாத்தியமற்றது. மேலும் இது சிறந்த குழந்தை வளர்ப்பு முறையாகாது.

இதன் காரணமாக பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்படலாம். இதனால் அவர்களுக்கு இடையே மலரக்கூடிய ஆரோக்கியமான உறவும் தடைப்படுகின்றன.

- மாற்று பெற்றோர்கள், குழந்தையின் தன்மை மற்றும் திறமைகளின் அடிப்படையில் அவர்கள் வாழ்க்கையின் இலக்குகளை அவர்களே அமைத்துக்கொள்ள உதவியாக இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு பலவிதமான அனுபவங்கள் மூலம் அவர்களின் விருப்பங்களை அவர்களாகவே பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய தருணங்களை ஏற்படுத்தி தருவது சாலச்சிறந்தது.

- மாற்று பெற்றோர்களுக்கு பயிற்சிகள் நடத்தும்பொழுது எவ்வாறு குழந்தையை மையப்படுத்தி அமைத்து கொள்ள வெண்டும் என்றும், அவர்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு குறைத்து கொள்ள முடியம் என்பதையும் தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.

## 9.2 மக்களிடையே விழிப்புணர்வின்மை:

மக்கள், சாதாரணமாக ஆதரவற்ற குழந்தைகளை இல்லங்களில் சேர்ப்பது குழந்தைகளுக்கு ஏற்ற தீர்வாக நினைக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல், விடுதி, இல்லங்களில் வளரும் குழந்தைகளுக்கு வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது, என்றும் அவர்கள் பலவிதமான உடல், மன, பாலியல் தாக்குதலுக்கு ஆளாகக்கூடும் என்பதையும் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

தத்து கொடுத்தல் நீண்ட நாட்களாக பெற்றோரை மையமாக கொண்டே இருந்தது. தம்பதியர் குழந்தைகளை தேடும் படலத்தின் முடிவாக தத்து எடுத்தல் காணப்பட்டது. தற்சமயம் குடும்பமே குழந்தைகள் வளர்வதற்கு சீரிய இடம் என்ற கொள்கையின் அடிப்படையிலும் தத்து எடுத்தல் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் செயல் என்ற காரணத்தினாலும் தத்து கொடுக்கும் முறை ஊக்குவிக்கப்படுகிறது. இதை போலவே மாற்று குடும்ப முறை குழந்தைகளின் தேவையை அடிப்படையாக வைத்து அமைய வேண்டும்.

சாதி, மதம், இனம், என்று பல காரணிகளால் பிளவுபட்டுள்ள சமுதாயத்தின் காரணமாக குழந்தையின் தேவையை மட்டுமே மையப்படுத்தி மக்களை இணைக்க மாற்று குடும்ப முறை ஒரு சிறந்த சாதனமாகும். தற்பொழுது ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயங்கி வரும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் இதை ஒரு முக்கிய பணியாக மேற்கொண்டு செய்தல் வேண்டும். இத்திட்டம் மாற்று குடும்ப முறையில் நான்கு படிநிலையாக செயல்பட்டு வருகின்றன.

### முதல் படிநிலை:

மாற்று குடும்ப முறை குறித்து ஒரு பரந்து விரிந்த மக்கள் கண்ணோட்டத்தை வளர்த்தல். இது குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு சிறந்த மாற்று பராமரிப்பு முறை என்ற பிம்பத்தை மக்களிடையே கொண்டு சேர்த்தல்.

### இரண்டாவது படிநிலை:

குழந்தைகளோடு தொடர்புடைய அனைத்து அமைப்புகளையும் இத்திட்டத்தில் பங்குதாரர்களாக்குதல். அரசு அலுவலர்கள் மக்கள் பிரதிநிதிகள் தன்னார்வு தொண்டு நிறவனங்கள், மருத்துவர்கள் போன்ற அனைவரிடமும் இந்த கருத்தை மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் வலிமையாக கொண்டு சேர்த்தல் அவசியம்.

### மூன்றாவது படிநிலை:

மாற்று குடும்ப முறையை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவும், ஆற்றலும், செயல்திறனும் கொண்ட அலுவலர்களை உருவாக்குதல்.

### நான்காவது படிநிலை:

மாற்று குடும்ப முறையில் பயனாளிகள் குறித்தும் அதன் பெற்றோர்கள் குறித்தும், அதன் வெற்றிகள் குறித்தும் மக்களிடையே பரப்புதல்.

மேலே குறிப்பிட்ட எல்லா பணிகளுமே குறுகிய காலத்தில் உடனடியாக செயல்படுத்த இயலாது. தொடர் முயற்சியும், அசைக்க முடியாத நம்பிக்கையும் குழந்தையின் நன்மையை மையப்படுத்திய செயல்பாடுகள் போன்றவற்றின் மூலமே இச்செயல்திட்டங்களை தொடர்ந்து எல்லா நிலைகளிலும் கொண்டு சேர்க்க இயலும்.

### கற்க கசடற

குழந்தைகளின் வயது அவர்களின் பின்னணி, மற்றும் அவர்களின் மனரீதியான வளர்ச்சி நிலை, ஆகியவற்றை கருத்தில் கொண்டே மாற்று குடும்ப முறையில் குழந்தைகளை இணைக்க இயலும்.

மாற்று குடும்ப முறையில் நன்கு பலன் பெற்ற குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளிடம் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் மாற்று குடும்ப முறையை வரவேற்க குழந்தைகளை உற்சாகப்படுத்தலாம்.

மாற்று குடும்ப முறையை ஏற்றுக்கொள்ளும் பெற்றோர்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொண்டு குழந்தைகளை மையப்படுத்தி அவர்களை புரிந்துகொள்ளவேண்டும்.

குழந்தை தன் திறமைகளின் அடிப்படையில் இலக்குகளை அமைத்துக்கொள்ளவதற்கு மாற்று குடும்ப பெற்றோர் உதவி புரியவேண்டும்

விடுதி, இல்லங்களில் வளரும் குழந்தைகளின் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது என்பதையும், குழந்தைகள் வளர்வதற்கு சீரிய இடம் குடும்பம் என்றும், தத்து எடுத்தல் குழந்தைகளுக்கு நன்மை அளிப்பதுடன் அவர்களின் வளர்ச்சி முன்னேற்றமடையும் என்பதை குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

## பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை குடும்பங்களுடன் இணைத்தல்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தை

↓

குழந்தை இல்லங்கள்

↓

- 0-6 வயதிற்குட்பட்டுள்ள குழந்தைகள் தாய், தந்தை இருவருமே இல்லையென்று, குழந்தை நல குழுவால் சான்று அளிக்கப்பட்டிருந்தால் → தத்துக் கொடுக்கலாம்
- 0-யிலிருந்து 18 வயது வரையுள்ள குழந்தைகள், சட்டரீதியாக தத்து கொடுக்க இயலாத சூழலில் உள்ள குழந்தைகள் → மாற்று குடும்ப முறையில் பராமரிக்கப்படலாம்
- ஒரு சில கால இடைவெளிக்கு பிறகு → பெற்றோர்களோடு இணைக்கலாம். →
  - உறுப்பினர் மூலம் குடும்பத்தில் பராமரிக்கச் செய்யலாம்.
  - நிதி உதவி தரலாம்

## மாற்று குடும்ப முறையில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரின் பொறுப்புகள்

**படிநிலை 1**

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு
- விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- மாற்று குடும்ப பெற்றோரின் பெயர் பட்டியலை தயார் செய்தல்

**படிநிலை 2**

- தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்களை குழந்தை நல குழுவால் அங்கீகரித்தல்
- தரவுகளை சரிபார்த்தல்

**படிநிலை 3**

- பயிற்சி அளித்தல்
- தொடர் பயிற்சி அளித்தல்
- பிற முயற்சிகளை (ஆற்றுப்படுத்துதல் அல்லது ஆலோசனை) மேற்கொள்ளுதல்

**படிநிலை 4**

- குழந்தையை தேர்ந்தெடுத்தல்
- குழந்தையை தயார்செய்தல்
- குழந்தை குறித்த தரவுகளை மாற்று குடும்ப பெற்றோரிடம் அளித்தல்
- மாற்று குடும்ப பெற்றோர் மற்றும் குழந்தை சந்தித்தல்

**படிநிலை 5**

- குழந்தையை மாற்று குடும்பத்துடன் இணைத்தல்
- மேற்பார்வையிடுதல்
- தொடர் கண்காணிப்பு

**FORM XXIX**

**[See rule 55(7)]**

# HOME STUDY REPORT FOR PROSPECTIVE FOSTER PARENTS

DATE OF REGISTRATION -

AADHAR CARD No. of Prospective Foster Parent : -

NAME OF THE SOCIAL WORKER -

DATE OF HOME VISIT -

**Part-I** of the format shall be filled up by the prospective foster parents and Part-II of the template shall be filled up by the Social Worker to submit an assessment report along with his/her observation about suitability of the prospective adoptive / foster parents.

## PART-I : SELF ASSESSMENT

A. **Information about the prospective foster parents and their family background**

| Particulars of the foster parents | |
|---|---|
| Full Name | |
| Date of birth & age | |
| Place of birth | |
| Complete Address with e-mail ID (Present & Permanent Address) | |
| Identity Proof | |
| Religion | |
| Language(s) | |
| Date of Marriage | |
| Present Educational Qualification | |
| Employment/occupation | |
| Name & Address of the present Employer/Business concern | |
| Annual Income | |
| Health Status | |

**B. Family background information:**

(1) Give a short description of social status and background of the prospective foster parents along with the following information:-

| Details about Parents of the Applicants | | |
|---|---|---|
| | **Father** | **Mother** |
| Name in full | | |
| Age | | |
| Nationality/Citizenship | | |
| Occupation | | |
| Previous occupation | | |
| Presently residing with | | |

(2) Please complete the following table with the names of each of your respective children (adopted and biological), their sex, educational status (kindergarten, elementary, etc.,) and dates of birth.

| Name of the Child | Sex | Date of Birth | Educational Status |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(3) If there are other members residing, please furnish the following information in respect of them.

| Name | Nature of Relationship | Age | Gender | Occupation |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

(4) Please describe how you believe the foster care would affect the family members (grand parents, children, relatives and others).

**C. Professional/Employment Details (Professional career details for last 5 years):**

| Foster Father | | | | |
|---|---|---|---|---|
| **Organisation** | **Employer Details (Name & Address)** | **Job Title** | **From** | **To** |
| | | | | |

| Foster Father | | | | |
|---|---|---|---|---|
| **Organisation** | **Employer Details (Name & Address)** | **Job Title** | **From** | **To** |
| | | | | |

**D. Financial Position:** (Give a short description of your income from all sources such as savings, investments, expenditures and liabilities and debts along with supporting documents) ……………………………………………………………………………… ………………………………………………

**E. Description of Home and Neighbourhood:** (Describe the accommodation details and neighbourhood relationship)

(1) How many rooms do you have in your home and describe the play area available for the child................................

(2) Please describe the neighbourhood in which you reside, including any aspect that you believe makes it child-friendly.......................

**F. Attitude and Motivation for foster care:**

(1) Please circle the term which best describes the reason why you wish to take a child in foster care, you may circle more than one option, if applicable:

Provide a companion to your other children;

Provide a child with a happy home;

Others, please specify ………………………………

(2) Please circle the statement which describes how you think the foster care arrangement will improve the lives of your other children, you may circle more than one, if applicable:

They will be less lonely;

They will learn to be more accommodating;

They will become more empathetic;

Not applicable as I have no other children;

Others, please specify ______________________________________

**G. Attitude of grandparents/extended family members, other relatives and significant others towards the foster care:** (Give a short description about the opinion of other important persons towards foster care who would have impact in the child rearing process)…………………………………………

**H. Anticipated Plans of the prospective foster parents for the child and rearing in the Family:**

(1) Please describe how you will manage caring for the child and other life commitments such as work

(2) Who will be responsible for caring for the child when you are at work, or absent from the familial home (domestic help, grandparents, spouse).

(3) Please describe your disciplinary approach to parenting.

(4) In case the foster child demonstrates adjustment difficulties, please describe the steps that you plan to take to ease his/her transition into the family?

(5) Would you be prepared to utilize family counselling if the child continues to have difficulties in adjusting?

(a) Yes

(b) No

(6) Would you be willing to support financially higher professional studies of the foster child

(a) Yes

(b) No

**I. Preparation and Training:** (Give details about the counselling sessions the prospective foster parent(s) have undergone on foster care, child care, handling of needs of children, etc. and their capacity, training and/or experiences in parenting children with their special need, if any)

**J. Health Status (Emotional and Physical):** (Give details of the state of emotional and physical health status of the applicant(s), if any. If a family member suffers from a particular disease, condition or syndrome, describe how the family copes with it and how this might affect any proposed foster care)

(1) Do you or your spouse suffer from any medical condition? If so, would you please provide details?

(2) Are you or your spouse currently being treated by a psychologist or psychiatrist?

(3) Are you currently taking any prescribed medication?

(4) Are there currently any children in your house being treated for a medical condition?

(5) Does your family have health and hospitalization insurance coverage for all family members?

**Signature of the Prospective Foster Parents**

**Date**

**PART-II: ASSESSMENT REPORT OF THE SOCIAL WORKER**

(To be used by the Social Worker to prepare the assessment report)

(The information/facts filled in the template shall be kept confidential by the agencies /authorities.)

**1. Factual Assessment**

(i) Have you verified the contents of the facts mentioned in Part I of the template?

Yes/No

(ii) Are you satisfied about the facts mentioned in the documents vis-à-vis observation during interviews and visits?

Yes/No

**2. Psycho-social Assessment**

**2.1 Interaction with the prospective foster parents**

(i) Have you interacted with the prospective foster parents individually and jointly?

(ii) Are the prospective foster parents well prepared for fostering the child?

**2.2 Home visit findings**

(i) When did you visit the home of the prospective foster parents? Who were the members present during your visit?

(ii) Whom did you interact during the home visit?

(iii) Have you met any neighbour/relative? Give a detailed description about the interaction?

(iv) Whether the home environment is conducive for the child?

(v) Are the prospective foster parents well prepared for foster care?

(vi) Did the prospective foster parents have any doubt about parenting issues or any other issues? Have you cleared their doubts?

**2.3. Interaction with the family members**

(i) Have you interacted with other family members of the prospective foster parents? What is their opinion about the proposed foster care? Are they positive about the foster care arrangement?

(ii) Are there any other family member(s) whom you could not interact but they might have a larger role in the proposed foster care? If so, how did you interact? Would you plan to take their views?

(iii) Have you interacted with older children present in the home of the prospective foster parents? If yes, please give details.

(iv) Have you noticed any adverse remarks from the family members? If so, how far those remarks may have an impact on the foster care process?

**2.4. Financial capacity**

(i) What is your opinion about the financial status of the prospective foster parents? Are they financially sound to welcome another member into their family?

(ii) Have you observed any financial situation which is hidden in the template?

(iii) Would you recommend any financial assistance to them?

**2.5. Physical and emotional capacity**

(i) Are the prospective foster parents in a good physical and emotional state to take care of a child?

(ii) Have you observed any physical or psychological issues with the prospective foster parents or any other family members that is going to affect the life of the upcoming child? If so, give details.

(iii) Are the prospective foster parents emotionally equipped enough to take care of a child?

**3. Recommendation for Foster care**

**3.1.** Do you recommend the prospective foster parents for foster care? Put your views and rational for recommending the prospective foster parents for foster care.

**3.2.** In case, you do not recommend the prospective foster parents for foster care, cite appropriate reasons for taking such decision.

**Signature, name, designation and official seal**

**FORM XXX**

*[See rule 58(5)]*

ORDER OF FOSTER CARE PLACEMENT WITH A FAMILY

**OR**

**GROUP FOSTER CARE**

The child (name and address) …………………approximate age……… d/o or s/o Mr………………… and Mrs…………………… is in need of care and protection of a family. Mr………………… and Mrs……………resident of (complete address and contact numbers)

…………………………………………are declared fit for foster-care placement of the child after considering the Individual Care Plan, Child Study Report and Home Study Report.

OR

Child Care Institution (Name and address)…………………………is declared fit for foster-care placement of the child after considering the Individual Care Plan and Child Study Report.

The child (name)……………………………..is placed in foster care for a period of …………………….........….. under the supervision of the aforesaid Child Welfare Officer/Social Worker (name and contact)……………………………………….............

**Chairperson/ Member**
**Child Welfare Committee**

**FORM XXXI**

*[See rule 59(1)]*

UNDERTAKING BY THE FOSTER FAMILY/GROUP FOSTER CARE ORGANISATION

I/We………………….……………… resident(s) of House No..…….Street……..…………….. Village / Town………………………… District …………State ………care giver associated with foster care home run by --------------------organization at ………… (address), do hereby declare that I/we am/are willing to take charge of (name of the child …………………………… aged……… under the orders of the Child Welfare Committee………………………subject to the following terms and conditions:

(1) If the conduct of the child is unsatisfactory I/we shall at once inform the Committee

(2) I/We shall do my/our best for the welfare and education of the said child as long as he remains in my charge and shall make proper provision for his maintenance.

(3) In the event of his illness, he shall have proper medical attention in the nearest hospital and a report of it followed by a fitness certificate shall be submitted before the Committee.

(4) I/We shall inform the Committee about any change of address.

(5) I/We shall do my best to ensure that the child will not be subjected to any form of abuse.

(6) I/We agree to adhere to the conditions laid by the Committee.

(7) I/We undertake to produce him before the Committee as and when required.

(8) I/We undertake to inform the Committee immediately if the child goes out of my charge or control.

Dated this ………………day of ………………..20

**Signature and address of 2 witnesses** **Signature of Applicant(s)**

**(Signed before me)**

Chairperson/Member,
Child Welfare Committee

K. MANIVASAN,
*Principal Secretary to Government.*